Regd No M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 6-11-1948 சனிக்கிழமை மலர் 9.

## தமிழகம் தழைக்கத் தாய்மார் வருவீர்!

தற்குறி நிறைந்த தண்டமிழ் நாட்டில்,
கற்பதற் கரிதாம் கடுமொழி யிந்தியை,
வற்புறுத் துதலால் வளமை குன்றி,
இன்பத் தமிழுமிகழவே யொழியும்.
திறமிகு பெரியார், திருவீ காவும்,
மறைமலையடிகள் மதிமிகு அறிஞர்,
இன்னும் பலரும் இயம்பின ரிதனை.
மறியலு மெங்கு மாணாக் டந்தது.
அறிந்து மிதனையே ஆட்சியாளர்கள்
அழிக்க முயன்றன ரதிகார மதால்
மக்கள் கருத்தை மதித்திலர் மந்திரி
மதியாததினால் மீண்டும் மறியல்
பெரியா ருரையால் பேர்த்தெழுந் திடுமே!
அடக்குமுறையும் அதிகமாகலாம்!
அதற் கெலாந் தமிழ ரஞ்சுவாரல்லர்!
இந்தி யொழித்திட இளைஞரே வருவீர்!
தமிழகந் தழைக்கத் தாய்மார் வருவீர்!
தனியர செய்த தமிழரே வருவீர்!
திராவிட நாடு திராவிட ருக்கென
திரண் டெழுந்து திசையெலாம் வருவீர்!

—காஞ்சீபுரம் சுவர்ணாம்பாள்.

| 1948 | | | NOVEMBER. | | | 1948 |
|---|---|---|---|---|---|---|
| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

சிறுவர் பகுதி.

# கடவுள் படி அளக்கிறாரா?

"தாதா"

மதப்பட்டி என்ற ஊரிலே பலிபீடம் என்ற ஒரு பௌத்த பிச்சு இருந்தான். அவன் அவ்வூரில் ஓர் புத்த மடம் கட்டிக்கொண்டு தினந்தோறும்காலையிலும்,மாலையிலும் கூட்டம் போட்டுச் சீவ காருண்யத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தான்.

அந்த பிச்சுவின் கண்மூடித்தனமான பிரசங்கத்தைக்கேட்டு ஏராளமான பாமர மக்கள் தங்கள் தொழில் துறைகளை விட்டு விட்டுப் பிச்சுவின் சீடர்களாகித் தலையை மொட்டை அடித்துக் கொண்டு, காவி ஆடை அணிந்து, கையில் ஓடு ஏந்தித் தினந்தோறும் வருசை வருசையாய்ச் சென்று, வீடு வீடாய்ப் பிச்சை எடுத்து உண்டனர்.

மதப்பட்டியில் உள்ள ஆண்களில் பலர் சோம்பேறிகளாய்வாழ விரும்பிப் புத்த மடத்தில் பிச்சுக்களாய்ச் சேர்ந்து விட்டனர். அதனால், அவ்வூர் பெண்களில்பெரும்பாலோர் தந்தையை இழந்து, சகோதரனை இழந்து, கணவனை இழந்து, பிள்ளையை இழந்து வறுமையில் வீழ்ந்து தவிக்க ஆரம்பித்தனர்.

அதைப்பார்த்து மனம் வருந்திய ஒரு பகுத்தறிவுப்பாட்டி உடனே புத்த மடத்திற்குச் சென்று பலிபீடத்தைக் கண்டு 'ஏ பிச்சுவே! நீ எங்கள் ஊரிலுள்ள ஆண்களை எல்லாம் பிச்சாண்டிகளாக ஆக்கி விட்டாயே! இனி, வயல்களில் உழைப்பது யார்? பெண்டு பிள்ளைகளெல்லாம் பிழைப்பது எப்படி?' என்று கேட்டாள்.

அதற்கு அந்தப் பிச்சு 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்!' என்றும், 'எறும்புகடை எண்பத்தி நாலாயிரம் சீவ சந்துக்களுக்கும் கருணாமூர்த்தியாகிய புத்த பகவானே படி அளக்கிறார்!' என்றும் கூறினான்.

'வெள்ளாண்மை விளைச்சல் இல்லாவிட்டால், கடவுள் எப்படிப் படி அளப்பார் பிச்சுவே? என்று பையுள் சிசுவுக்கும் கடவுள் படி அளக்கவில்லையா? மூதாட்டியே! அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று எண்ணிக்கொண்டு வீட்டிற்குப்போய்ச்சேர்' என்றான் பலிபீடம்.

பகுத்தறிவுப்பாட்டிக்கு பலிபீடத்தின் பதில் கோவத்தை மூட்டியது, 'அட மூடப்பிச்சுவே! "வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் அன்று" என்பதன்றோ எங்கள் பண்டைப் பழமொழிகள் நானூற்றில் ஒன்று! நீயோ! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும்முடிச்சுப்போடப் பார்க்கிறாயே? அட மூளையற்ற மூடமே! தாய் செத்துப்போனால், கருப்பைக்குள் இருக்கும் சிசுவுக்குக் கடவுளாலேனும் உணவு ஊட்ட முடியுமா? தேரை உண்ட கல் உபயோகமற்றுப் போவதுஉனக்குத்தெரியாதா? மரம் வைத்த மனிதன் தண்ணீர் ஊற்றாமல் மரம் பட்டு மடிந்து போவதில்லையா? பருவக்காற்றும், மழையும் இல்லாத பாலைவனத்தில் செடி கொடிகள்கூடஉண்டாவதில்லை என்பது நீ உணராததா?' என்று மளமளவெனக் கேள்விகளைக்கேட்டு பிச்சுவைத் திணறச் செய்து விட்டாள்.

பிச்சுவுக்குப் பதிலளிக்கவும்வழி இல்லை, மூட மதச்சம்பிரதாயத்தை விட்டுக்கொடுக்கவும் மனமில்லை. அப்போது, சமீபத்திலுள்ள ஒரு நீரோடையில் கொக்குகள் மீன்வேட்டை ஆடிக்கொண்டிருப்பதைக்கண்டார். பகுத்தறிவுப்பாட்டிக்குப்பதில்கூறத்தனக்குஒரு ஆதாரம்கிடைத்துவிட்டதாகநினைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்:

'ஏ மூதாட்டியே! அதோபார்! அந்தக்கொக்குகளுக்கு நீண்டு வளர்ந்து மெலிந்த கால்களையும், குறடுபோன்ற வாயையும் கருணாமூர்த்தியாகிய கடவுள் படைத்திருப்பதாலல்லவா அவைகள் தண்ணீரில் ஓசைஇல்லாமல் நடக்கவும், ஓடும் மீன்களைப் பிடித்து உண்ணவும் முடிகிறது? அப்படி [illegible] வரும்போது, சிற்றறிவுடைய ஒரு கிழவியாகிய நீகருணாமூர்த்தியைப் பழித்துப்பேசலாமா?' என்றான் பலிபீடம்.

'அடமுட்டாள் பிச்சுவே! உன் கடவுளின் கருணையைக்கேட்டால் சிறு குழந்தைகூட நகைக்குமேடா! கொக்குகளைப் பொருத்தமட்டில் நீசொல்வது ஒருவேளை உண்மையானாலும், மீன்கள் அக்கடவுளின் கருணையைப்பற்றி என்ன நினைக்கும்?' என்று கேட்டாள் பகுத்தறிவுப்பாட்டி.

பதிலளிக்க நாவெழாத பலிபீடம் தன் சீடர்களை நோக்கி 'மாய்கையே உருவான இந்தப் பெண் பேயை மடத்தை விட்டு அடித்துத் துரத்துங்கள்' என்று கட்டளையிட்டான். மூடச் சீடர்களால் வெளியே விரட்டியடிக்கப்பட்ட மூதாட்டி வீடு வீடாய்ச் சென்று சோம்பேறிப் பிச்சுக்ளுக்குச் சோறுபோட வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.

மறுநாள் பிச்சைக்குச் சென்ற பிச்சுக்கள் வெறுஞ் சட்டியோடு மடத்துக்குத் திரும்பினர். அதைக்கண்ட பலிபீடம் சீடர்களிடம் 'கடவுள் படி அளப்பார்! கருணாமூர்த்தி புத்த பகவான் நம்மைக் கைவிடமாட்டார்!' என்றெல்லாம் உபதேசம் செய்து பார்த்தான். நாட்கள் இரண்டு மூன்று ஆகிவிட்டன. சில பிடிவாதமான மூடச் சீடர்கள் பட்டினியால் மாண்டனர்.

பலர், 'பசி வந்திடப் பத்தும் பறக்கும்' என்ற பழமொழிக்கொப்ப, 'பழைய குருடி கதவைத் திறடி' என்று பாட்டுப் பாடிக்கொண்டு வயல்களில் போய் முன்போல் வெள்ளாண்மை விளைச்சலைக் கவனிக்கலாயினர்.

பலிபீடம் மட்டும் இன்னும் எப்படிப் பசியையோ பட்டினியையோ சட்டை செய்யாமல் மடத்திலேயே இருக்கிறான் என்று அறிய ஒரு சீடனுக்கு ஆசை உண்டாயிற்று. உடனே, அவன் யாரும் அறியாமல் புத்த மடத்தில் புகுந்து ஒளிந்திருந்து கவனித்தான்.

பகல் முழுதும் கழிந்தது, இரவு வந்தது. நடுநிசியில் பலிபீடம் மெதுவாக எழுந்து சென்று புத்த விக்ரகத்தை ஆலிங்கனம் செய்துகொண்டிருந்தான். சீடன் மிகக் கூர்மையாகக் கவனித்தான்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

19-வது மாநாட்டில்

# நாட்டின் படம்திறந்த நல்லறிஞர் பொன்மொழிகள்!

★

**24ம் நாள்**
ஈரோடு மாநாட்டில்
'திராவிடநாடு' படத்தினைத்
திறந்துவைக்கும் முறையில்
தமிழ்ப் பெரியார்
திரு. வி. க. அவர்கள்
சாற்றிய கருத்துகள்!

## திராவிட நாட்டுப்படத்தைத் திராவிடன் திறப்பதில் தவறென்ன?

திராவிடர் கழக உறுப்பினன் அல்லாத நான் திராவிட நாட்டுப்படத்தைத் திறந்து வைப்பது பொருந்துமா என்று பல தடவை யோசித்துப்பார்த்தேன். முடிவில் இந்நாட்டு மக்கள் எல்லோருமே திராவிடர்கள்தான், நானும் திராவிடன்தான். எனவே தாராளமாகத் திறந்து வைக்கலாம்; அதில் ஒன்றும் தவறில்லை என்கின்ற முடிவுக்கு வந்தேன்.

* *

தவறில்லை என்கிற முடிவுக்கு வந்தது முதற்கொண்டு என் மனதில் என்னென்னவோ எண்ணங்கள், என்னென்னவோ ஆதாரங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவற்றை எல்லாம் தொகுத்து எழுதப்புகின் அவையே ஒரு ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக அமைந்து விடும். அவ்வளவு பொருள் செறிந்த கருத்துக்கள் கடல் அலைகள் போல் என் மனத்தில் மோதிக்கொண்டே இருக்கின்றன. அவற்றைத் தொகுத்து எழுதும் ஆற்றல் எனக்குத் தற்போது இல்லாமைக்கு நான் பெரிதும் வருந்துகிறேன்.

## பிரிவினைப் போராட்டம் பெரும் வெற்றியே!

நேற்று நம் தோழர் அண்ணாதுரை அவர்கள் தம் தலைமையுரையில் மே திங்களைப்பற்றியும் அக்டோபர் திங்களைப்பற்றியும் குறிப்பிட்டார். அவைகள் உலக சரித்திரத்திலேயே பெயர் பெற்ற மாதங்கள்தான். பாட்டாளி மக்களின் விடுதலைச் சரித்திரத்தில் நினைவிலிறுத்திக் கொண்ட மாதங்கள்தான் அவை. திராவிடர் கழகமும் அத்தகைய போராட்டத்தில் தான் விரைவாக இறங்கிக் கொண்டிருக்கிறது.

* *

இன்று நம் இளைஞர்கள் திராவிடர் கழகத்தின் போராட்டத்தைக் குறித்துப் பேசிய கருத்துக்களைக் கேட்டு நான் உண்மையிலேயே ஆனந்தங்கொண்டேன். இவ்வளவு உண்மையோடும், உறுதியோடும், வீராவேசத்தோடும் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்படி பேசக்கூடிய எண்ணற்ற இளைஞர்கள் இருக்கும் போது திராவிடநாடு பிரிவினையடைவதில் சிறிதும் அய்யப்பாடு இருக்கக்காரணமில்லை என்றே எனக்குத் தோன்றியது.

* *

அந்நியன்சுரண்டல் பெருகப்பெருக பிரிவினை உணர்ச்சியும் பெருகுவது நிச்சயம்.

## திராவிடர்கள் யார்?

திராவிடர்கள் என்பதற்கு எனது ஆராய்ச்சியில் பல பொருள்கள் தென்பட்டன. அவற்றுள் இரண்டை மட்டும் ஈண்டு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். திராவிடர் என்றால் ஓடுபவர்கள் என்று ஒரு சார்பாரும், ஓட்டுபவர்கள் என்று மற்றொரு சார்பாரும் கூறுகின்றனர். வடமொழிச் சார்புடையவர்கள் முன்னைய அர்த்தத்தையும், சிவஞான முனிவர் அவர்கள் பின்னைய அர்த்தத்தையும் கூறுகிறார்கள். இவற்றுள் எதைக்கொள்வதென்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

திராவிடம் என்று ஒரு பகுதி இருந்து வருகிறது என்பதுபற்றியோ, அல்லது அதன் எல்லையைக் குறிப்பிடுவதுபற்றியோ யாரும் நம்மோடு சர்ச்சைக்குவர முடியாது.

## இரு வேறு கலாச்சாரம்!

இந்தியாவென்பது பெரிய நாடு. இதில் பல திறப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்றாலும் இந்நாட்டில் இரண்டு பெரிய கலாச்சாரங்களே அடிப்படைக் கலாச்சாரங்களாகக் காணப்படுகின்றன. இவை இரண்டும் பெரிதும் முரண்பட்ட கலாச்சாரங்களாகவும் இருந்து வருகின்றன. இவற்றுள் ஒன்று ஆரிய கலாச்சாரமாகும். மற்றொன்று திராவிட கலாச்சாரமாகும். வடநாட்டில் பெரும்பாலும் ஆரிய கலாச்சாரமும் தென்னாட்டில் பெரும்பாலும் திராவிட கலாச்சாரமும் நிலவி வருகிறது.

* *

ஆரியக் கலாச்சாரம் சுரண்டலையும் ஏமாற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதைப் பின்பற்றி வருபவர்கள் தமது சுரண்டலுக்காக அந்நியநாடுகளை ஆக்கிரமிக்கும் எண்ணம் கொண்டு முயற்சி செய்து வருகிறார்கள்.

திராவிடக் கலாச்சாரம் சமதர்மத்தை, சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால் அதைப் பின்பற்றுபவர்கள் பிறர் சுரண்டலை ஒழித்து சுதந்தரமாக வாழ விழைகிறார்கள். எனவேதான் பிரிந்து வாழ நினைக்கிறார்கள் தென்னாட்டவர்கள்.

* *

ஒரு காலத்தில் தமிழ் நாடு மிக மிக உயர்ந்திருந்தது. பிறகு ஆரியத்தின் சுரண்டலுக்கு ஆட்படவே இன்று மிக மிகத் தாழ்ந்து விட்டது. சுரண்டலுக்கு உள்ளாக்கிய வடநாடு மிகமிக உயர்ந்து நிற்கின்றது இன்று. அன்று தென்னாடு உயர்ந்திருந்ததைக் கண்டவர்கள் அதைச் சமன் செய்ய அகத்தியனை அனுப்பியதாகப் புராணம் கூறுகிறது. இன்று வடநாடு உயர்ந்திருப்பதைச் சமன் செய்ய ராஜகோபாலாச்சாரியை அனுப்பலாமா என்று நினைத்தால் அது கூடாது என்றுதான் என் மனம் கூறுகிறது. அவரை அனுப்ப என்மனம் ஏனோ

[தொடர்ச்சி 12ம் பக்கம்].

---

கம் தீர்ந்தது!

பலிபீடம், புத்தர் சிலையில் உள்ள தலையை மட்டும் தூக்கித் துண்டாக வைத்துவிட்டு அதற்குள் ஒளித்து வைத்திருந்த ரொட்டி, வெண்ணை, பழங்கள் முதலியவைகளை எடுத்துத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டான் சீடன்.

உடனே அச்சீடன் பலிபீடத்தின் அருகில் சென்று 'ஏ திருட்டுப்பிச்சுவே! உனக்குக் "கடவுள் படி அளக்கிறாரா?" என்றுகடிந்து கேட்டான். அன்றிரவே அம்மடத்தைவிட்டு ஓடிப்போன பலிபீடம் எங்கே, யாரை, என்ன வேடத்தில் எப்படி ஏமாற்றிக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# பதிவாளன் பாலன்.

போட்டி

எண் 8.

பாலன் பத்தாவது படித்துப்பாஸ் செய்துவிட்டு, ஒரு அரசாங்க ஆபீஸ் ஒன்றில் குமாஸ்தா வேலைபார்த்து வந்தான். குமஸ்தா வேலை என்றால், அதுவும் அரசாங்க ஆபீஸ் என்றால், காசநோய் உற்பத்தி நிலையம் என்றுதான் அர்த்தம். அரசாங்க ஆபீஸ்களில் குமஸ்தாவேலைபார்த்து 'ரிட்டையர்டு' ஆகி பென்சன் வாங்குபவர்கள் எத்தனைபேர் என்று கணக்கு எடுத்தால் ஒரு சதவீதங்கூட இருக்காது. இது அந்த அரசாங்க பென்சன் இலாகாவே சொல்லும் செய்தி.

பாலன், பத்தாவதுபடித்துப் பாஸ் செய்து விட்டான என்று ஒரு வரியில் சொல்லிவிடுவதுபோல் பத்தாவது படித்துப் பாஸ் செய்வது, அவன சாதிக்கு அவ்வளவு சுலபமாகவா இருக்கிறது? அரசாங்கத்திலே, அவன் சாதிக்கென்று தனிச்சலுகைகள் கொடுப்பதாக வெட்கமின்றி சொல்லிக்கொள்ளுகிறார்களல்லவா? அதுஎன்ன? பள்ளிக்கூடத்தில் சம்பளமில்லாமல் படிப்பது என்று. அந்த சம்பளமில்லாமல் படிக்கும் சலுகைபெற அவன் பட்ட கஷ்டத்தைப்பார்க்கப் போனால் படிக்காவிட்டால்தான் என்ன? என்று கூடத்தான் தோன்றிற்றாம்! அந்த சலுகையை அவ்வளவு சுலபத்தில் பெற அரசாங்கம் வசதிசெய்து கொடுத்திருக்கிறார்கள்! அதைப்பற்றி அவனைக்கேட்டால் தான் தெரியும்.

அரசாங்கத்தினர் ஜனநாயகம் என்ற போர்வையில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஒட்டுஉரிமைஉண்டு என்று சொன்னார்களல்லவா? அந்தக் கூத்து நடந்தது. அதில் பாலனுக்கும் ஒரு வேசம். அந்த நகரத்திலே, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இருநூறு பதிவாளர்களில அவனும் ஒருவன்.

இரண்டு வீதிகள் அவன். வாக்காளர்களைப் பதிவு செய்யவேண்டியது. வாக்காளர்களாகப்பதிவு செய்வது அவ்வளவு கடினமானவேலையல்ல என்றுதான் அவன் நினைத்தான். அந்த முறைகளைப்பற்றி இரண்டு வகுப்புகளையும் நடத்திச் சொல்லிக்கொடுத்தார்கள். வாக்காளர்களாகப் பதிவு செய்வதில் அதன்படி நடக்கத்தான் வேண்டுமா? ஆம்! அரசாங்கத்தின் ஆணையல்லவா? தவறினால் சீட்டல்லவாகிழித்து விடுவார்கள்?

அந்த வாக்காளர்களிடம் வாதம் புரிந்து, பிறகு அவர்களை திருப்திபடுத்திப் பதிவு செய்வது தான் அவ்வளவு சுலபமாகவா இருக்கிறது? அதிலும் நூறு வீட்டுக்கு வரி கட்டுபவர்களிடமும், தூயகதர் ஆடை அணிந்திருப்பவர்களிடமும் வாதம் புரிய ஒவ்வொரு பதிவாளர்களோடும் ஒவ்வொரு வக்கீல்களை அல்லவா! அனுப்பியிருக்க வேண்டும்.

“வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற ரீதியில் இருபத்தொரு வருடம் கடந்தவர்களுக்கெல்லாம் 'ஓட்' பதிவு செய்ய வந்திருக்கிறேன்; உங்கள் வீட்டிலுள்ள வயது வந்தவர்களின் பெயர்களையும் வயதுகளையும் கூறுங்கள், தற்சமயம் வீட்டிலுள்ளவர்களை மட்டும் கூறுங்கள், அவர்கள் என் எதிரிலேயே கையெழுத்துப் போடவேண்டும். வெளியில் சென்றிருப்பவர்கள் அங்கங்கே அவர்கள் உள்ள இடங்களிலேயே பதிவுசெய்யப்பட்டு விடுவார்கள். தவறினால் இரண்டாவது தடவை நான் வரும்போது பதிவு செய்து கொள்ளுங்கள். இது அரசாங்கத்தின் ஆணை” என்று கூறினால்—

“எழுதிக்கொள்ளுங்கள், என் பெயர் எல்லப்ப செட்டியார் வயது 45. மனைவி பெயர் மங்களம் வயது 32. மகன் பெயர் மாணிக்க வாசகம் வயது 22.” இதிலுள்ள அர்த்தத்தைக் கவனிக்கக் கூடவா ஒரு பதிவாளனுக்கு உரிமையில்லை? மனைவியின் வயது 32-ஆக இருக்கும்போது மகன் வயது இருபத்திரண்டாகவா இருக்கும்? 32 வயதுள்ள மங்கைக்கு 22-வயதுள்ள மகன இருக்க முடியுமா? என்றுகேட்டால், என்ன பதில் கூறுவார் எல்லப்ப செட்டியார்? மூத்த மனைவியின் மகன் என்ற பதிலைத்தவிர வேறு இருக்க முடியாதல்லவா? ஆனால் எல்லப்ப செட்டியார் என்ன கூறுகிறார் கவனியுங்கள், “கதர் கட்டியிருக்கிறேனே' நான் கூடவா பொய் சொல்லுவேன்!” என்று கூறுகிறார். இதற்கு என்ன சொல்வது!

“சரி! கையெழுத்துப் போடமற்றிருவரையும் வரச்சொல்லுங்கள்” என்றால், “பையன் அவசியம் இருந்தேஆகவேண்டுமா? கும்பகோணம் போயிருக்கிறான். வர மூன்று மாதமாகும். அதனால் என்ன? நானே போட்டுவிடுகிறேனே?” என்று கூறினால் ஒரு ஏழைக் குமாஸ்தா என்ன பதில்கூற முடியும்? அவர் என்ன சாதாரண மனிதரா? மூன்றாவது மாடியில் மூவர்ணக் கொடி பறக்கிறது. அதன் நடுவில் சத்தியத்தை நிலைநாட்டும் சக்கரம். வீட்டின் சுவர் தவறாது சத்திய நெறி தவறாத தேசத் தியாகிகள். அந்த வீதியிலுள்ள வீடுகள் அனைத்திற்கும் அவரே வரிகட்டுகிறார். அவர் கூறுகிறார் மேலே நாம் காட்டியபடி. ஒரு பதிவாளன் தீர்க்கக் கூடிய சிக்கலா இது?

மற்றொன்று பெரிய வீடு. பெரிய மனிதர் ஒருவர், வீட்டின் சொந்தக்காரர்தான் வீற்றிருக்கிறார் வெளித் திண்ணையில்.

“உங்கள் வீட்டில் எத்தனை பேர் வயது வந்தவர்கள்?”

“ஏழுபேர்”

“பெயர், ஆணாயிருந்தால் தகப்பன் பெயர். பெண்ணாயிருந்தால் கணவன் பெயர், வயது முதலியவைகளைச் சொல்லுங்கள்”

“வீட்டில் எல்லோருமிருக்கிறார்களா?”

“...ம்...இருக்கிறார்கள்”

எல்லாம் எழுதி முடிந்தது. “தயவு செய்து எல்லோரையும் வந்து என் எதிரிலே கையெழுத்துப் போடச் சொல்லுங்கள்”

“எல்லோரும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்; பையனிடம் கொடுங்கள்; கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்துவிடுவான்”

“எல்லோரும் என் எதிரிலேயே கையெழுத்துப்போடவேண்டும்; ஏனென்றால் ஒருவரே எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் கையெழுத்துப் போடலாமல்லவா?”

அதெப்படியய்யா! முடியும். என்னைத் தவிர வேறு ஆறு பேர் பெண்கள்; ஒருவள் சமைக்கிறாள், ஒருவள் குளிக்கிறாள், ஒருவள் குழந்தைக்குப்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## தோழர்களே.

இதற்குமுன் 7 கதைகளையும்

படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 5 கதை

பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

# பாஸ்டிலிக்கு அப்பால்

★

"உன்பெயர்?"

"வாட்"

"என்ன செய்தாய்?"

"ஒன்றும் செய்யவில்லையே!"

"ஒன்றும் செய்யவில்லையா? சட்டமன்றத்திலே நீ நிற்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா?"

"எனக்கு எல்லா இடமும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றுகிறது."

"உன்மேல் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது! உண்மையா?"

"திருட்டுக் குற்றமா? எது திருட்டு?"

எதுவா? பிரபுக்கள் விருந்து மண்டபத்தில் நுழைந்தால் அதுவே பெரிய குற்றம். அங்கே பிரபுக்களுக்காக வைத்திருந்த விருந்து, ரொட்டித் துண்டைத் திருடித் தின்றாய். ஆக உன்மேல் இரு குற்றங்கள்."

நான் செய்ததுதான் குற்றமாகத் தோன்றுகிறதா? அதை நான் எதற்காக ஏன் செய்தேன் என்பதை நீங்கள் கேட்கவுமில்லை; சிந்திக்கவுமில்லை. தண்டனை தரும் ஒன்றையே பார்க்கின்றீர்!

குடிமக்கள் பணத்திலே கொழுத்து, உல்லாசமாக விருந்துண்டு, ஊரிலே உள்ள கொவ்வை இதழ் அழகிகளோடு கூடித்திரியும் இந்த குடிகாரர்கள் செய்வது உங்களுக்குக் குற்றமாகத் தோன்றவில்லையா?

ஏழைகளின் உழைப்பிலே கூலி வாங்கி பிரபுக்களின் சார்பிலே நீதி வழங்கும் நீதிபதியே! விருந்து, கேளிக்கை, உல்லாச வாழ்வு ஒரு சாராருக்கே உரிமையாக்கப்பட்டு விட்டதா? என்போன்றவர்களுக்குத் தண்டனையே தர சட்டம் இடம் கொடுத்து விட்டதா? சரியான..........!

ஏய்! நிறுத்து! ஆளுபவர்கள் அவர்கள். அவர்களின் போக்கிலே குறைகாண நீயார்? அவர்களின் ஆட்சியைப்பற்றி அகிலமே பேசுகிறது. நாள் ஒன்றுக்கு நாலைந்து விருந்தில் கலந்து கொண்டு மக்கள் மதிப்பைப் பெற்று வருகிறார்கள். அவர்[illegible]க்கூறுகிறாயா? ஆட்சி எப்படியிருக்கும் என்பதே அறியாத அயோக்கியனே!

இவனை இங்கே நிறுத்தியிருந்தால் இன்னும் ஏதேதோ பேசுவான். இழுத்துச்செல்லுங்கள் இந்த நாயை 'பாஸ்டிலிக்கு.'"

பாஸ்டிலிக்கா?...உண்மையை அறிந்து நீதி வழங்காத அக்கிரம ஆட்சிநடந்து வரும் நாட்டிலே நான் ஓர் அநாதையானநடைப்பிணமாகத் திரிவதைவிட, அநீதிவழங்கும் அரசாங்கத்தின் பெருமையை நானிலத்திற்கே எடுத்துக்காட்டும் சிகரமாக இருக்கும் கோர 'பாஸ்டில்' சிறையே மேல்" என்று சொல்லிவிட்டுச் செல்கிறான்.

* *

'ஜேம்ஸ்வாட்' என்ற வாலிபன் பாரிஸ் நகரையடுத்த பண்ணை ஒன்றில் கூலி வேலை செய்து வந்தான். அவன் புரட்சியுள்ளம் படைத்தவன். அவன் போக்கு பிரபுக்குப் பிடிக்கவில்லை. எந்தப் பண்ணையிலும் அவனை வேலைக் கமர்த்திக்கொள்ளக்கூடாது என்பதற்காக ஒரு சின்னம் காட்டி, வெளியே துரத்திவிட்டார்கள். அவன் பாரிஸ் நகரவீதிகளிலே பிச்சை எடுத்துத்திரிந்து வந்தான். அவனிடமுள்ள அடையாளத்தைக்கண்டவுடன் 'பூட்ஸ்'காலால் உதைத்துத்தள்ளி விட்டுச் செல்வார்கள் அந்நகர நாரீமணிகள்கூட.

பிச்சைகிடைக்கவில்லை. பல நாள் பட்டினி. என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்நிலையில் எதைச் செய்தாலும் சரியாகத்தான் அவனுக்குத் தோன்றிற்று. கொலை செய்வதுகூட சரியாகத்தான் தோன்றிற்றாம். ஆனால் கொலை செய்வதற்கான சந்தர்ப்பம் அவனுக்கு வாய்க்கவில்லை.

ஒருநாள் தன் கால்போனபோக்கிலே போனான். அழகிய மண்டபத்திற்கு கொண்டு சென்றது. அவனையாரும் தடுக்கவுமில்லை. எதிரிலே கண்டான் எவ்வளவோ சுவையானபண்டங்களை. அதில் சிலதான் அவனுக்குத் தெரிந்து உண்ணும் பொருளாகத்தோன்றி[illegible]யான பொருள்களென்று. ரொட்டித்துண்டுதான் அவனுக்குச் சரியாகத் தெரிந்த பொருளாக இருந்தது. ஒரு துண்டை எடுத்து அங்கே நின்று கொண்டு தின்றுகொண்டிருந்தான். காவலாளிகள் கண்டனர்! கோர்ட்டுக்கு இழுத்துச் சென்றனர். அங்கே விசாரணை நடந்தது. அதுதான் நாம் மேலே காட்டியுள்ளது. நீதிபதிக்கும் ஜேம்ஸ் வாட்டுவுக்கும் நடந்த கோர்ட்டு உரையாடல்.

இது பிரான்ஸ் நாட்டில்.

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 23ம் நாள் போர்.

சென்னை, நவ. 2.

சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியின்கிளைப் பள்ளியின் முன்பு இன்று காலை 9-30 மணிக்கு மறியல் ஆரம்பமாயிற்று.

சர்வாதிகாரி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் மறியல் தொண்டர்களான திருமதி அலர்மேலு அப்பாதுரை, தோழர்கள் கலைச்செல்வன் சாளைகபீர், ஒ. சி. பாண்டியன், சி. எஸ். திராவிடமணி ஆகிய அய்வரும் முத்தியால் பேட்டைத் திராவிடர்கழகத்திலிருந்து புறப்பட்டு அமைதியாக வந்து, சர்வாதிகாரி மறியல் தத்துவத்தை விளக்கிக்கூறியபின் மறியல் செய்தனர்.

10-30க்கு மறியல் முடிந்து தொண்டர்கள் கழகத்திற்குத் திரும்பும் போது ஆயிரக்கணக்கில் கூடியிருந்த மக்களும் அவர்களைப் பின்பற்றினர். போலீசார் அவர்களை நாலா பக்கங்களிலும் விரட்டியடித்தார்கள். இருந்தும் பொது மக்கள் எதிர்ப்பு ஒலிகளை முழக்கிக்கொண்டு தொண்டர்களைப் பின்பற்றிச் சென்றனர்.

மறியலின் போது, இந்தியை வெறுக்கும் வகையில் துண்டறிக்கைகளை மாணவர்களே தங்கள் சொந்தப் பொறுப்பில் வழங்கினர். இந்தி படிக்கும் மாணவர்களில் பலர் பள்ளிக்கே வரவில்லை. சர்வாதிகாரிக்கும் தொண்டர்களுக்கும் மாலையணிந்து "இந்தி படியோம்" என்று உறுதிமொழிகூறி வந்த மாணவர்கள் பள்ளியுள் புக்கனர்.

னையோ இதுபோல நடந்தன. காரணமின்றி, விசாரணையின்றி, பிரபுக்களின் கோபக்கனலிலே படநேர்ந்தாலோ 'பாஸ்டிலி' என்ற படுபாதாளச் சிறையிலே அந்நாட்டு ஏழை மக்கள் தள்ளப்பட்டனர். கோர 'பாஸ்டிலி', மக்கள் நடத்திய புரட்சிப் புயலில் சுக்கு நூறாகிவிட்டது. பிரான்ஸ் நாட்டில் நடந்த புரட்சியில் மக்கள் முதலில் சிதைத்தது பாஸ்டிலி சிறைக் கூடத்தைத்தான்.

* *

என்னப்பா? எப்பவோ நடந்த கதையைக் கூறுகிறாயே! அது நமக்கு எதற்கு? அது நம்நாட்டில் அல்லவே! அதைப்பற்றி நாம் ஏன் கவலை கொள்ளவேண்டும். இங்கு நடப்பது ராமாராஜ்ய மன்றோ! ஜனநாயக ஆட்சியன்றோ நடக்கிறது! அந்தப் பிரபுக்கள் ஆட்சியைப் பற்றி நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்? என்று கேட்கும் தோழர்களுக்கு இதோ! ஒன்று. படித்துப் பாருங்கள், தலைப்புச் சரியாவென்று.

"உன்பெயர்?"

"பேச்சியம்மாள்"

"ஊர்"

"தென்காசியையடுத்த கிராமம்"

"புருஷன் பெயர்!"

"சண்முகம்"

"தொழில்!"

"நிரந்தரமாக ஒன்றுமில்லை"

"நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாய் என்பது தெரியுமா?"

"தெரியாது"

"பழிகாரி! தெரியாது என்றா கூறுகிறாய். மூன்று குழந்தைகளை கொன்றுவிட்டு"

"நான் கொல்லவில்லை; பட்டினியின் முடிவு."

"என்ன! பட்டினியின் முடிவா! என்ன துணிச்சல்! சுதந்தர சர்க்காரிலா இதுபோலக் கூறுகிறாய்! அடி கள்ளி! உன் செயலுக்கு சர்க்காரையா குறை கூறுகிறாய்!"

"சர்க்காரைக் குறைகூறவில்லை; குறைகூறக் கூடாது என்ற காரணத்தினால் தான் இதுபோலச் செய்தேன்."

"பட்டினிச்சாவு என்று பத்திரிக்கையில் வெளிவந்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்? ஆளுகிறவர்களைக் கையாலாகாதவர்கள் என்றல்லவோ நினைப்பார்கள். மந்திரிசபை ஆட்டங்காணுமே! நீதான் கிணற்றில் தூக்கிப்போட்டு

# இந்தி எதிர்ப்பு மறியல்.

☆

## 24-ம் நாள் போர்.

சென்னை நவ-3—

இன்றும், நேற்றுப் போலவே காலை 9-30 மணிமுதல் 10-30 வரை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் கிளைப்பள்ளியின் முன்பு மறியல்.

தொண்டர்கள் நேற்றைய அய்வருமே. அமைதியான முறையில் இந்தி படியாதீர்! எனப்பணிவோடு கூறினர். மாணவர்கள் உற்சாகத்தோடு இந்தி படியோம் எனக்கூறிச் சென்றனர்.

நேற்றிலும் இன்றுபொதுமக்கள் அதிகம். ஆனால் மக்களை யெல்லாம் வெகு தொலைவிலேயே நிறுத்தி "போலீஸ் வேலி" அமைக்கப்பட்டிருந்தது.

---

தனை நாள் காத்திருந்தாய் இந்தச் சதி செய்ய! ஏற்றுக் கொள் தண்டனையை. ஆயுள் நாள் முழுவதும் கடுங்காவல்!"

"என்னய்யா! சுயராஜ்ஜிய சர்க்கார் என்று கூறுகிறீர்கள். சாகக்கூட உரிமையில்லையா? எத்தனை நாள் பட்டினிகிடப்பது? பட்டினி கிடந்து வதைவதைவிடப் பாழும் உயிரைப் போக்கிக் கொள்வது எவ்வளவுநல்லது? நாங்கள் ஏழைக் குடும்பம், ஏராளமான நிலங்கள் எங்கள் ஜில்லாவில் சும்மாகிடக்கிறது. பலமுறை என் கணவர் கலைக்டரைக்கேட்டார் உழுதுபயிரிட்டு வாழ. மறுத்துவிட்டார். தஞ்சாவூர் ஜில்லாவில் பண்ணையில் ஏதாவது வேலைகிடைத்தால் திரும்பிவந்து எங்களைக் கூட்டிச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றார். ஒருமாதமாகியும் இன்னும் வரவில்லை. வீட்டில் உணவுக்காகவேண்டி ஒன்றுமில்லை. மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யட்டும். யாரும் ஒரு விதமான உதவியும் செய்ய முன்வரவில்லை. சில நாள் பட்டினி. சிலநாள் பிச்சை எடுக்கவும் நேர்ந்தது. எட்டுமாத கர்ப்பிணி நான். வெய்யிலில் குழந்தைகளை வைத்துக் கொண்டு வீதிகளில் சுற்றி பிச்சை எடுக்கவும் முடியவில்லை. சிலர் கூறிய கொ

செய்து கொள்ளக்கூடாது என்று நினைத்தேன். கடைசியில் கஷ்டம் பொறுக்கமுடியவில்லை. பிள்ளைகள் தவிப்பதைப் பார்த்துக் கொண்டு பெற்றதாய் எப்படி மனம் சகிக்கமுடியும்? ஊரைவிட்டுக் கிளம்பினேன். ஒரு வழியும் புலப்படவில்லை. ஒரேவழிதான். மூன்று குழந்தைகளையும் அந்த கிணத்தில் தள்ளி விட்டு நானும் குதித்து விட்டேன். இப்படி உலகத்தில் கஷ்டப்படுவதைவிட ஒரேயடியாக இறந்து விட்டால் கஷ்டமே தொலைந்து விடுமல்லவா? என்னைக் காப்பாற்றி இந்தக் கஷ்டத்திற்கு ஆளாக்குகிறீர்கள். பட்ட தொல்லை போதாதென்று இது வேறேயா? "என்று சொல்லி கூவியழுதாள் ஒரு பெண்மணி, திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டில் சென்ற ஆகஸ்டுமாதம் 13-ந் தேதி. இவளை இழுத்துச் செல்லுங்கள் என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார் நீதிபதி.

'விசித்திர வழக்கு' என்றதலைப்பில் சென்ற ஆகஸ்டு மாதம் 14-வ தினசரி பத்திரிக்கையிலும், 15-வ சுதேசமித்திரனிலும் 18-வ 'இந்து' பத்திரிக்கையிலும் வெளிவந்த ஒரே செய்தி. இதில்எவ்வளவு உண்மைகளை இப்பத்திரிக்கைகள் மறைத்து எழுதி யிருக்கின்றன. உண்மையை முற்றிலும் வெளியிடவில்லை.

நண்பர்களே! முதலில் காட்டியதையும் பிறகு காட்டியதையும் ஒப்பிட்டுப்பாருங்கள். அந்த பிரான்ஸ் நாட்டு பாஸ்டிலி சிறை கூடத்தைக் கட்டி ஆட்சிபுரிந்த அநீதிவாதிகளின் காலத்தில் நடந்ததற்கும் இதற்கும் என்ன வேற்றுமை உண்டென்று. அதையுமல்லவா மிஞ்சி நிற்கிறது, சுதந்தர சர்க்கார் என்று சொல்லிக்கொள்கிறவர்களின் ஆட்சியில்.

சுதந்தரம் பெற்று, ராமராஜ்யத்தில், ஜன நாயக அரசு செலுத்தி ஓராண்டு விழாக் கொண்டாடும் போதுதான், இறக்கும் உரிமையும் பறிக்கப்பட்டதா என்று ஏங்கி, பேச்சியம்மாளின் இதயத்திலிருந்து கேட்கும் நிலைபிறந்திருக்கிறது. பட்டதாரியின் கேள்வியல்ல அது; அரசியல் வாதியின்கேள்வியல்ல: அறிவாளியின் கேள்வியல்ல: படிப்பென்பதேயறியாத, உழைத்து உருக்குலைந்த எட்டுமாதக் கர்ப்பிணி ஏழை பேச்சியம்மாளின் இத

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# தென்னாடே! என்நாளோ?

[✱]

உன் தன்மைக்கு என்ன பெயர் தெரியுமா? சோட்டா தில் வாலா (கோழை நெஞ்சன்)

உன் நிறப்பெயர் என்ன தெரியுமா? காலா மதராஸி (கருப்பு மதராஸான்)

உன் தாய் மொழிக்கு என்ன வர்ணனை தெரியுமா? குடு குடு காத்தாகை (குடு குடு என்று பேசுபவர்)

இந்தப்பெயர் உனக்கு யாரால் இடப்பட்டது தெரியுமா? உனக்கு என்ன தெரியும், நீதான் கோழை நெஞ்சம் கொண்டவனாகி விட்டாயே! இதைப்பற்றி நினைக்கவும், ஆராயவும் உனக்கு ஆசை ஏது?

உன் நிறம்போல் தான் உன் மனமும் இருள் அடைந்திருக்கிறது என்று சொல்லப்படும் வார்த்தையில் எவ்வளவு உண்மை இருக்கிறது!

ஜெய் ஹிந்த்! என்று நாணம் அற்றுப் பேசுகிறாயே! உனக்கு நாணம் வரும் நாள் என்நாளோ? அறிவில், உலகம் எவ்வளவோ வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கும் இக்காலத்தில் உன் காலா (கருப்பு) மனம் அறிவைக்காணும் அந்நாள் என்நாளோ? கோழை நெஞ்சம் படைத்த உன் ஏழை நெஞ்சம் எழுச்சியுறும் நாள் என்நாளோ? அர்த்தமற்றவிதத்தில்பேசும் உன் ஜெய் ஹிந்த் வாயில் இருந்து அர்த்தம் நிறைந்த அகம் மகிழக் கூடிய வார்த்தைகள் வெளிவரும் நாள் என்நாளோ?

கிணற்றுத் தவளைபோல் உள்ள உனக்கு வடநாட்டானின் வஞ்சகத்தைப் பார்க்கமுடியவில்லை. ஆகையால் உன் மனம் போல் உளறுகிறாய். வடநாட்டானுடன் வாழும் எங்கள் மனம் உன் கண் இழந்த போக்கைப் பார்த்து ஆச்சரியப்படுவதோடல்லாமல், அவமானத்தால் துடிக்கிறது.

உன் தாய் மொழியை குடு குடு என்று கேலி செய்யும் கூட்டத்தின் தாய் மொழியாகிய இந்தியை இன்பமான மொழி என்றும், தேசிய பாஷை என்றும் புகழ்ந்து கூறும் பொறுப்பற்ற தலைவர்களைக்கொண்ட உனக்கு நாணம் வரும் நாள் என்நாளோ? நூற்றுக் கணக்கான உன் சகோதர சகோதரிகள் டில்லியிலும், இன்னும் வடநாட்டுப் பட்டணங்களிலும், பிச்சைக்காரக் கோலம்பூண்டு இரவில் தெருக்களில் உருண்டு கிடக்கும் கோரத்தைப் பார்க்க உனக்குக் கண்கள் இருந்தால், உன் நாட்டில் பட்டுமெத்தைமேல் சாய்ந்து, "நம்பள் நகை கொடுக்கிறான், நிம்ப்ள்கி நம்பள், பணம் கொடுக்கிறான்" என்று ஆனந்த முகத்துடன் பேசும், மார்வாடி முகங்களோடு, உன் பிச்சைக்கார சகோதர, சகோதரிகளின் ஆபாச முகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் சக்தி இல்லாமலா போகும். ஜபல் பூரில் உன் தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட சகோதரிகள், உன் நாட்டில் பட்டுமெத்தையில் படுத்துறங்கும் பனியாவின் தோட்டத்தில் புல் பிடுங்கும் காட்சியைப் பார். அதோ நிற்கிறானே அவன் தான், உன் நாட்டில் சுரண்டும் வடநாட்டான் மகன். அந்தோ அவன் ஏன் அங்கு நிற்கிறான், சற்று கவனமாய் உன் சகோதரியிடம் அவன் பேசும் வார்த்தைகளைக் கவனி. உன் உணர்வற்ற காதில் இந்தவிதம் கேட்கும். "ஏக் தபா மான் லோ, பீர் அர் ரோஸ் காஸ் லேஜாவோ?" ஏ! உயிர் அற்ற உடலே (தென்னாடே) உனக்கு இதன் அர்த்தம் தெரியுமா? "ஒரு தடவை சம்மதித்து விடு! பின் தினமும் புல் எடுத்துக் கொண்டுபோ!

உனக்கு இப்போதுகூட மானம் வந்துவிடும் என்று நம்பவில்லை. நீ நினைப்பது நம் நாட்டில் இவன் இந்த விதம் செய்ய முடியாது என்பது தானே? உன் சகோதரி ஏன் உன்னைவிட்டு இந்த நாட்டில் புல் பிடுங்க வந்தாள் என்று அவளிடம் கேள், உடனே உன் நாட்டின் கோரத்தாண்டவம் உன் முன் நிற்கும்.

அரிசி ரேஷன் வரப்போவதாக நம் நாட்டுப் பத்திரிக்கைகளின் தலையங்கங்களைப் பார்த்தோம். ஏ! ஆராய்ச்சியற்ற அடிமையே! ஜெய் ஹிந்த் என்று சொல்லுகிறாயே! இதனுள் இந்தியா ஒன்று தான் என்ற அர்த்தமும் இருக்கிறதே! அப்படியானால் இந்தப் பஞ்சம் வடநாட்டில் ஏன் இல்லை.

முன்னால் குறிப்பிட்டவைகளில் உன்வாஞ்சை சென்றால் அன்றோ இந்த அரசியல் அம்பலம் உனக்கு விளங்கும். ஏ! தென்னாடே உன்னோடு வாழ வழியில்லாமல்தான் நானும் உன்னைவிட்டு வடநாடு வந்தேன். உன் நாட்டவரை ஆதரியாமல் அடிமையாய் அன்னிய நாடு அனுப்புகிறாய்! ஆனால் ஆணவக் காட்டுமிராண்டிச் செயலால் பலன் அனுபவித்த வடநாட்டு அகதிகளை ஆதரிக்கிறாய்! நூற்றுக் கணக்கில் உள்ள உன் அகதிகளைக் காக்க உனக்கு மனம் இல்லை! ஆனால் ஆயிரக்கணக்கில் உள்ள அன்னிய அகதிகளை ஆதரிக்கிறாய். இதை நினைக்கையில் அழுகையும், சிரிப்பும்தான் வருகிறது. ஆம்! உன் உடம்பில் ஓடும் உதிரத்துடன் பல அபாய விஷக் கிருமிகள் கலந்திருப்பதனால் அன்றோ, உன் உதிரம் உணர்வற்று ஓடுகிறது.

ஏ! தென்னாடே, உன்னைப் பிரிந்து அன்னிய நாட்டில் வாழும் எங்களை உன்னோடு வாழவைக்கும் நாள் என்நாளோ! உனக்கு மானம் வரும் நாள் என்நாளோ? உனக்குப் பகுத்தறிவு வரும் நாள் என்நாளோ? நீ வீரன் என்ற பட்டத்தைத் திரும்ப அடையும் நாள் என்நாளோ? வஞ்சகர் வலையை அறுத்தெறியும் நாள் என்நாளோ? நீயும் மற்றைய நாடுகளோடு சேர்க்கப்படும் நாள் என்நாளோ?

ஏ தென்னாடே! இது கற்பனை அல்ல. உனக்கு மேல் குறிப்பிட்ட பெயர்களில் சந்தேகம் உண்டானால் பட்டாளத்தோழர்களும், வடவருடன் பழகியவர்களுமாகிய தென்நாட்டவரோடு கேட்டு உன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்! மற்ற விஷயங்களை வடநாட்டுப் பட்டணங்களில் வந்து பார். முடியாவிட்டால் வடநாடு வந்து நன்கு பழகிய தென்னாட்டவரைக்கேள்.

அழகன்.

★

## ராணிவேண்மாள்.

மன்னார்குடி போலீஸ்லயன் தோழர் கிருஷ்ணசாமி அவர்களின் பெண் குழந்தைக்கு ராணிவேண்மாள் எனப் பெயரிட்டதின் நினைவாக நமக்கு அனுப்பிய நன்கொடை ஒன்றும் வரப்பெற்றோம்.

[ஆ-ர்]

# குடி அரசு

6—11—48 சனிக்கிழமை.


## கடைசி அத்தியாயம்!

ஈரோடுதந்த முடிவுகளில் சிலவற்றைப் பற்றிச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம். திராவிடக் கழகம், போராட்டத்திற்கு மத்தியில் நெருக்கடியான வேளையில் ஒன்றுகூடி, போர்முனைகளைப் பெருக்குவதற்கு வழிகாட்டியதோடு, இந்த அரசியல் போராட்டத்தின் கடைசி முடிவு எது என்பதையும் மாநாடு வற்புறுத்தியிருக்கிறது.

நமது இன்றைய நிலைமையில், நாம் அரசியலில் பங்கு கொள்ளவில்லை என்பதை அடிக்கடி விளக்கிக் கூறி வந்திருக்கிறோம். அதாவது தேர்தலுக்கு நிற்பது, சட்ட சபையைக் கைப்பற்றுவது, ஆளுங் கட்சி அல்லது அதற்கு எதிர்க்கட்சியாக வீற்றிருப்பது என்கிற முறையில் அரசியலில் பங்கு கொள்ள, நாட்டு மக்கள், தங்கள் பொறுப்பையுணர்ந்தவர்களாகஆகவில்லை; அதற்கான வகையில் அவர்கள் உணர்த்தப்படவும் இல்லை, அந்த வேலையைச் செய்வதுதான் நமது உடனடியான வேலை என்பதாகக்கூறி அதற்கு ஏற்பக்காரியங்களைச் செய்து வந்திருக்கிறோம். ஆனால் என்றைக்குமே நம்முடைய நிலைமை இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதோ, இருந்து வரமுடியும் என்பதோ அல்ல என்பதையும் அப்போதைக்கப்போது எடுத்துக் காட்டியும் வந்திருக்கிறோம்.

சேலத்திற்குப் பிறகு, நாம் செய்துவரும் காரியங்கள் எல்லாம் "பிரச்சார" அளவாகவே இருந்தாலும், அப்பிரச்சாரத்தினால் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் அரசியல் விழிப்புணர்ச்சியைக் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது. இந்த விழிப்புணர்ச்சி பெரும் அளவுக்கு ஆகி, நல்ல பலனைக் கொடுக்கக்கூடிய விதத்தில் வளர்ந்தோங்க வேண்டிய காலமே நாம் நேரடியாய் அரசியலில் ஈடுபடுவதற்கான காலமாகும்.

இன்றைய இந்தி எதிர்ப்பு அறப்போர் தொடங்குவதற்கு முன்னாலேயே, படைத்தலைவர் பெரியார் அவர்கள், தொடங்கப்படும் அறப்போர் வெறும் மொழிப் போராட்டம் அல்ல என்றும், வடநாடு—தென்னாட்டுப் போர் என்றும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஆரிய—திராவிட இனப்போராட்டம் என்றும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதாவது அரசியல் போராட்டத்திற்கு—வெளியாரின் எந்தவிதமான சுரண்டலுக்கும் ஆளாகாதபடி செய்யப்படவேண்டிய உண்மையான விடுதலைப் போராட்டத்திற்கு—இந்த மொழிப்போராட்டம் ஒரு தோற்றுவாய் ஆகும். இதனுடைய கருத்து என்ன?

இன்று மத்திய அரசாங்கத்திற்கு எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்து விட்டு, மாகாணங்கள் எல்லாம் தலையாட்டிப் பொம்மைகளாக இருக்கவேண்டும்என்று பேசப்பட்டு, ஸ்தாபன ரீதியில் அடிமையாயிருப்பவர்களால் அது ஆமோதிக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டு வரும் காலம். வேளைக்குத் தகுந்தபடி வேஷம் போடும் வீண் போக்குடைய பொருளாதார நிபுணர்களாலும், சட்டவல்லுநர்களாலும் அப்போக்கு அங்கீகரிக்கப்பட்டு அதற்கு ஆதரவாகப் பேசப்பட்டு வரும் காலம். மாகாணங்கள் சுயேச்சையாகப் பிரிந்து நிற்க வேண்டும் என்று பேசுவதே, சட்ட விரோதமான—தேசத்துரோகமான காரியமாகிவிடுமோ என்று மற்ற மாகாணங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் காலம். நாட்டுப்பிரிவினையை ஆதரித்து அதற்கான காரணங்களைக் கூறிடும் பத்திரிகைகளுக்கு ஜாமீன் தொகை கேட்கப்படும்காலம் இது. இந்தக் காலத்தில்தான் மொழிப் போராட்டம், சுரண்டலற்ற விடுதலைப் போராட்டத்திற்குத் தோற்றுவாய்என்கிறதுதிராவிடக்கழகம்.

பார்ப்பன—பனியாக்கூட்டு ஒப்பந்த அடிப்படையில் அமைந்திருக்கும் மத்தியசர்க்காரோ, அதன் பரிபூரண அடிமைகளான மாகாண சர்க்கார்களோ விடுதலைப்போராட்டத்தை விரும்பாது. விரும்பாதது மட்டுமல்ல அப்போராட்டத்தை நசுக்க எல்லாவிதமான ஈனச் செயலையும் செய்யத் தயார்! தயார்!! என்று முழக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த முழக்கத்தைக் கேட்டுத் திராவிடன் மூர்ச்சையடையமாட்டான். கொடியரின் கொடுஞ்செயலுக்கெல்லாம் கோழையாகி அடிமையாயிருக்க யார்தான் விரும்புவர்? இதைஎடுத்துக்காட்டியுணர்த்துவதுதான் மாநாட்டில் நிறைவேறியிருக்கும் 6-வது தீர்மானமாகும்.

..."இந் நாட்டில் இயற்கை வளங்கள் மிகச்சிறப்புற்றிருந்தும், மத்ய சர்க்கார் என்ற பிணைப்பில் இந்நாடு கட்டுப்பட்டிருக்கிற படியால், வடநாட்டிலிருந்து இங்கு வந்து சுரண்டும் மார்வாரி, குஜராத்தி முதலியவர்களின் சுரண்டுதல்களின் காரணமாக, இந்நாட்டில் தொழில் வளம் வளர்ச்சி பெற முடியாத நிலையில் மத்திய சர்க்காரின் தொழில் திட்டங்கள் அமைந்திருப்பதினாலும், இந்நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வு செம்மையாக்கப்படவேண்டுமென்றால் இத்திராவிடநாடு தனி நாடாகப் பிரிந்தாகவேண்டும் என்றும் திராவிடர் கழகத்தின் அடிப்படைத் திட்டத்தை மீண்டும் இம் மாநாடு வற்புறுத்துகிறது"

இந்தத் தீர்மானம், நமது போராட்டத்தின் கடைசி அத்தியாயம் எது என்பதை ஆள வந்தவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதாகும். மத்திய சர்க்காரின் மிரட்டலுக்கோ மாகாண சர்க்காரின் காட்டிக் கொடுத்துக் கொடுமைச் செய்யும் போக்குக்கோ பயந்து கொண்டு திராவிடக்கழகம் தன் நியாயமான உரிமையை விட்டுக் கொடுத்து விடமாட்டாது, எப்பாடுபட்டேனும் இன இழிவைத் துடைத்தேதீரும் என்கிற பெரும் உறுதியைத் தெரிவிப்பதாகும்.

உண்மையாகவே நம் காங்கரஸ் திராவிடத் தோழர்களுக்கு, அவர்கள்யாராயிருந்தாலும், நன்மையையுணரும் நல்லறிவோ, உண்மைக்கு மதிப்புத்தரும் உயர் குணமோ, பொதுத் தொண்டுசெய்யவேண்டும் என்கிற புனிதமான செயலோ சிறு எள்ளு மூக்கத்தனையாவது இருப்பது உண்மை யென்றால், தமிழ்ப் பெரியார் அவர்களின் திராவிட

நாட்டுப் படத்திறப்பு விழாப் பேச்சை ஒருமுறை படித்துப்பாருங்கள் என்று அவர்களை வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

திரு. வி. க. அவர்களின் பேச்சைச்சிந்தைக்கு விருந்தாக்குங்கள் என்று நாம் கேட்டுக்கொள்வது, திராவிட நாட்டுப் பிரிவினைக்கான காரணங்களைத் திராவிடக்கழகம் இதுவரை கூறி வந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக அவர் கூறியிருக்கிறார்என்கிற அள்வைஎடுத்துக்காண்பிக்க வேண்டும் என்றஆசையினாலல்ல. அர்சியல்வாழ்வில் உங்களின் தந்தையான அவர்—உங்களின் இன்றையச் சுகவாழ்வுக்கு வழிதேடித்தந்த அவர்—தன்னைத் தேய்த்துத் தேய்த்துக் காங்கரசை வளர்த்த அவர்—தமிழ் மூதறிஞரான அவர்—தமிழ் நாட்டு வரலாற்று அறிவு மிக்க அவர்—சமயச்சமநோக்குடைய அவர்—எந்த விதமான பதவியும் இந்தக் கொள்ளையிலும்கூட நமக்குக் கிடைக்கவில்லையே என்று பொறாமைப் படுகிறார் என்று எவரும் சொல்ல முடியாத நிலையிலுள்ள அவர்—திராவிடக்கழகத்தினால் அவருக்கு முன்பு இல்லாத சிறப்போ, செல்வமோ பெற்றுவிட முடியும் என்று எவரும் எண்ண முடியாத நிலையிலுள்ள அவர்—திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை எந்த அளவுக்கு வற்புறுத்தியிருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே.

பசுந்தமிழிலே, ஆணித்தரமான சொற்களால், அமைதியும் வீரமும் கைகோக்கும் பாணியில், பொருள் செறிவோடு அவர் புகன்றிருக்கும் பொன்மொழிகளைக் காணும் ஆறறிவுடைய எவர்தான் அவற்றைப் பொய்யென்றோ, உண்மைக்கு மாறானவை என்றோ கூறிவிட முடியும் என்று கேட்கிறோம்.

நாட்டுப் பிரிவினை ஏற்படாமல் இன்றைய விபீஷணர்களும், அநுமார்களும் ஏதோ சில காலத்திற்குத்தான் முட்டுக்கட்டையாய் இருந்துவர முடியும். என்றைக்குமே முட்டுக்கட்டையாயிருக்க முடியாது. காலப்போக்கில் ஒவ்வொரு மாகாணங்களும்கூட, எந்த விதமான போராட்டமுமில்லாமல்கூட தனித் தனிச் சுயேச்சையான சுதந்தர நாடுகளாகவே ஆகித்தீர வேண்டும். அப்படி ஏற்படாத வரை அதாவது இப்போதைய அரசியல் நிர்வாகப் போக்கே நீடிக்குமானால், பஞ்சபாண்டவர்களுடைய குடும்ப வாழ்க்கையைப் போலத்தான் அது இருக்கிறது என்று யாரும் சுலபமாகத்தெரிந்து கொண்டுவிடுவர் என்பது நிச்சயம். இதை அரசியல் ஞானமுடைய எவரும், இந்தத் துணைக்கண்டத்தின் இயல்பை யுணர்ந்த எவரும் மறக்க முடியாது.

இந்த மாநாட்டில் கழக உறுப்பினர் கடைப்பிடித் தொழுக வேண்டுமெனச் சிலவற்றைக் கூறி அது ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கழகம் வளர்ந்துகொண்டிருக்கும் இந்த நிலையில் அதாவது பலவகையான கடவுள் நம்பிக்கையுடையவர்களும் கழகத்தில் சேர்ந்துகொண்டு வரும் இந்த நிலைமையில், மதத்தைப்பற்றிக் கடவுளைப்பற்றிக் கழகத்தினுடைய கருத்து என்ன என்பதைத் தெளிவுபடுத்துவது இத்தீர்மானம் என்றே நாம் எடுத்துக் கொள்கிறோம்.

யாரும் கடவுள் நம்பிக்கையுடையவராயிருக்கலாம். அது கழகத்தின் போக்குக்கு மாறுபட்டதல்ல. ஆனால் இந்தக் கடவுளுக்கு நான் இப்படிப்பட்ட பக்தன் என்று சொல்லாமலே மற்றவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் மதக்குறிகளை அணிவதோ, பெண்டாட்டாடி, வைப்பாட்டி, புதல்வன், பேரன் முதலிய பெருங் குடும்பமுடைய கடவுளுக்கு அல்லது கடவுள்களுக்குச் சிலை செய்து வைத்து அதை வணங்குவதோ, "நான் பூதேவன் நீ தேவடியாள் மகன்" என்று சொல்லி நமக்குப் புரியாத மொழியிலே உளறிக்கொட்டும் தரகனான பார்ப்பனன் அர்ச்சகனாக இருக்கும் கோயிலுக்குள் நுழைவதோ, மூட நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்டுவரும் எந்தவிதமான விழாக்களிலும் கலந்து கொள்வதோ கூடாது என்பதே யாகும். மேலும் மதசம்பந்தமான புராணமோ நவீனமோ ஆன நாடகம், சினிமா முதலியவைகளுக்குச்செல்லுதல் கூடாது, அவைகளை வெறுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதுமாகும்.

இது மாநாட்டில் 12வது தீர்மானமாக நிறைவேறியிருக்கிறது. கழக உறுப்பினர்களுக்கென்று தனியாக நிர்மாணத் திட்டங்களை வகுக்கவேண்டுமென்கிற அடிப்படையில் இத்தீர்மானம் நிறைவேறியிருக்கிறது என்பதாக இதை நாம் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த முறையில் இதைப் பின்பற்றுங்கள் என்றும் நாம் சொல்லவில்லை. ஏனென்றால் உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நல்லவைகள் எவையோ, இனிக் கண்டுபிடிக்கப்படவேண்டிய நல்லவைகள் எவையோ அவைகள் எல்லாவற்றையுமே கழக உறுப்பினர் கடைப்பிடித் தொழுகவேண்டுமென்பதுதான் கழகத்திற்கு நிர்மாணத்திட்டமாக இருக்க முடியும். அப்படியிருக்கச் சில காரியங்களை எடுத்துக்கூறி இவைகளை வெறுக்க வேண்டுமென்றுகூறுவது எப்படி நிர்மாணத் திட்டம் ஆகிவிடமுடியும்?

"நல்லது செய்ய முடியாவிட்டாலும் கெட்டதையாவது செய்யாமல் விடுங்கள்" என்பது தான் இந்தத் தீர்மானத்தின் சுருக்கம் என்று கூறலாம். நாம் தேவடியாள் பிள்ளையாக இருப்பதற்கும், வாழ்வில் முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும் ஆணிவேராயிருப்பது எவையோ, அவைகளைக் கல்லி எறிய வேண்டு மென்பதுதான் இதன் சாராம்சம். மிகமிகச் சாதாரணமான இவ்விஷயங்களைக் கூடப் பின்பற்ற முடியாதவர்கள், தன்னைக் கழகத்தின் உறுப்பினன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படவேண்டாமா என்று கேட்கிறோம்.

மதுவிலக்குக்குப் பிறகு, ஆலயப் பிரவேச அனுமதிக்குப் பிறகு, ஏழைமக்களின் உழைப்பை உறிஞ்சும் சாண்டல் இயந்திரங்களாக,

## இந்தி எதிர்ப்பு மறியல்.

(●)

### 25-ம் நாள் போர்.

சென்னை நவ 4—

நேற்றுப்போலவே இன்றும். அய்வர் மறியல். மாணவர்களோடு பொதுமக்களும் தொண்டர்களுக்கு மாலையணிந்து எதிர்ப்பொலி முழக்கினர். சரிபாதிப் பேர் இன்று பள்ளிக்கூடம் வரவில்லை. மறியல் முடிந்துத் திரும்பிய தொண்டர்களைப் பின்பற்றிய பொதுமக்கள் இன்று போலீசாரால் விரட்டப்படவில்லை. வந்திருந்த போலீஸ் 'வானும்' காலியாகவே திரும்பியது.

கொள்ளையடிக்கும் கள்ளுக்கடைகளாக வெகுவேகமாக மாறிக்கொண்டு வருபவைகள் இவை. சமுதாய இழிவு நீக்குமுறையில் மட்டுமல்லாமல், பொருளாதாரச் சுரண்டலைத் தடைசெய்யவேண்டுமென்கிறமுறையிலும், இந்தத் தீர்மானம் மிக முக்கியமானதாகும்.

★

## 'குடி அரசு' தினசரி.

ஈரோடு, நவ. 3.

'குடி அரசு' தினசரியாகப் பின்னர் வெளியிடுவதற்காகச் சர்க்கார் அனுமதி கேட்கப்பட்டதற்கு, ரூ. 1000 ஜாமீனாகச் சர்க்காரால் கேட்கப்பட்டது. 29—10—48ல் கோவை ஜில்லா கலெக்டரிடம் தோழர் நா. கரிவரதசாமி அவர்கள் பேருக்கு டிக்ளரேஷன் வாங்கி நேற்று ரூபாய் ஆயிரமும் இங்கு சப்-டிரஷரியில் செலுத்தப்பட்டுவிட்டது.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு!

ஒவ்வொரு மாதமுடிவிலும் 'பில்லை' யனுப்பியும், 8 தேதிக்குள் பாக்கியையனுப்பிவிடவேண்டுமென அறிவித்தும் பல ஏஜண்டுத் தோழர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

ஒவ்வொருவரும் 3-மாதம் 4-மாதம் பாக்கியை அனுப்பாதிருந்தால் பத்திரிகை எப்படி நடக்கும்? இந்த மாதம் 15-ம் தேதிக்குள் எல்லா ஏஜண்டுகளும் பாக்கித் தொகைகளையனுப்பிவிட வேண்டுமென வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாக்கித் தொகையை யனுப்பாத ஏஜண்டுகளுக்கு 15-ம் தேதிக்கு மேல் பத்திரிகையனுப்பப்படமாட்டாதென்பதையும் அனுப்பாத ஏஜண்டுத் தோழர்களின் பெயர்களை நாம் அம்பலப்படுத்த வேண்டியதாயிருக்கும் என்பதையும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

மானேஜர், குடிஅரசு.

## வேலாயுதம் நினைவு நாள்

பணமுடிப்பு தரவும் ஏற்பாடு.

—()❁()—

சீர்திருத்தச் செம்மலும், வன்னிகுல முன்னேற்றத்திற்கு உழைத்தவருமான (13—11—47-ல்) மறைந்த மறவர் தோழர் சா. வேலாயுதம் அவர்களின்நினைவுநாள் 14—11—48அன்று உடையார்பாளையத்தில்கொண்டாடப்பெறுமென்றும், அன்னாரது சிறுமிகளின் கல்விவளர்ச்சிக்குதி பணமுடிப்பு ஒன்று தர ஏற்பாடு நடந்து வருவதாகவும் அறிவிப்பதோடு, 13—11—48 முதல் 20—11—48 முடிய எல்லாக் கழகங்களும் "வேலாயுதம் நினைவு நாள்" கொண்டாட வேண்டுமாயும் வேலாயுதம் நிதிக் குழுத்தலைவர் தோழர் வி. அரங்கசாமி கேட்டுக்கொள்கிறார்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யத்திலிருந்து எழுந்த கேள்வி. சட்ட சபையில், ஏன் பேச்சியம்மாள் எட்டு வருடக்குழந்தைமுதல் எட்டு மாதக் குழந்தையையும் கொல்ல நேர்ந்தது என்று சர்தார் வேதரத்தினங்கள் கேட்கும் கேள்வியா? அது. சே!

பேச்சியம்மாள் கேட்கிறாள் சுதந்தர சர்க்காரில்பிழைக்கத்தான் வழியில்லை என்றால் சாகக்கூட வழியில்லையா? என்று. கூறுங்கள் தோழர்களே! உண்டா? இருந்தால் உயிருள்ள பேச்சியம்மாளுக்கு உலகத்தில் உள்ளளவும் சிறைவாசமா? வாழுவதற்கு வழிபமைத்துத்தர முடியாதஅரசாங்கத்திற்கு குற்றம் கண்டுபிடித்துத் தண்டனைதர மட்டிலும் என்ன உரிமையுண்டு? பேச்சியம்மாள்செய்ததுசரிதான் என்று எவரேனும் கூறுவாராயின், துஷ்டனே! நாட்டைக்காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகனே! சுதந்தரசர்க்காரைக் கவிழ்க்க சதி செய்கிறாய்! ரத்தம் சிந்திப்பெற்ற சுதந்தர நாட்டில்ரணகளத்தை உண்டுபண்ணப் பார்க்கிறாய் என்று கடுஞ்சொற்களைக் கக்துவார்கள், பரந்த நோக்கங் கொண்ட, சர்வதேச அரசியல் வாதியின் வழியே செல்லுவோர். அவர்கள் இதுபோன்ற சாதாரண விஷயங்களைப்பற்றி சிறிதும் சிந்தியாதது, புரியாததாலா அல்லது அலட்சியமாகக் கருதுவதாலா? என்பதுதான் நமக்குப்புரியவில்லை.

எவ்வளவோ அநியாயங்கள் நடந்து வரும்போது இதைப் பார்க்க ஆச்சரியம் கொள்ளுவதற்கில்லை. பேச உரிமையில்லை; சட்டை போட உரிமையில்லை. ஊர்வலமாகச்செல்ல உரிமையில்லை; கருப்பாக 'சர்சிப்' 'பாக்கட்' டில் வைத்துக்கொள்ளவும் உரிமையில்லாத ஆட்சி நடந்து வரும்நாட்டில், பட்டினிக்கொடுமை தாங்க முடியவில்லை அதனால் கிணற்றில் வீழ்ந்து மடிந்துபோக எத்தனித்தேன் என்றால் எந்த ஜனநாயக சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்கும்? அடி! பிடி! சிறையில்போடு! என்ற மூன்று மந்திரங்கள்தான் இன்றைய சர்க்காரின் மூலமந்திரங்கள். இதை விட்டால் கதியேது! இந்த மூன்றையும் வைத்துக்கொண்டு அய்யறிவுள்ள மிருகம் கூட ஆட்சி செய்ய முடியுமே! அப்படியிருக்க ஆறறிவுகொண்ட அறிவாளி என்று சொல்லிக்கொள்ளும், தியாகிகள் பக்தர்கள் எதற்கு?

எந்த நாட்டிலும் அறிவு வளர்ச்சிக்கான செயல்களுக்குத்தடைவிதித்ததாக இந்தக் காலத்தில் நாம் கேட்டது கூட இல்லை. அப்படிப்பட்ட செயல் இன்னும் இந்த நாட்டில்நடக்கிறது என்றால் மக்களையெல்லாம் மந்தியாக்கவேண்டும் என்ற மனப்போக்கோடு, ஆதிக்க வாதிகள் செயல் புரிகின்றனரா? இந்நிலை எந்நாட்டிலும் நீடிக்காது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லையா? அறிந்தும் அதுபோல செயல்புரிவதென்றால் ஒன்று ஆணவமாக இருக்க வேண்டும் இல்லையேல் அதிகாரபோதையாக இருக்கவேண்டும். எதுவாக இருப்பினும் தெளியவைக்க வேண்டியது மதியுள்ள மக்கள் கடமை. பாஸ்டிலி சிறைகூடக் காலத்து ஆட்சியிலும் கொடுமையானது, ஜாரின் கொடுங்கோலாட்சியிலும்கொடுமையானது ஒன்று இருக்குமானால் அது இந்நாட்டிலுள்ள இன்றைய ஆட்சிதான் என்று சொன்னால் அது மிகையாகாது. நாட்டிலேநாடகத்திற்குக்கூட தடை! நரசிம்மசாமியைக் கூட சிறையில் பிடித்து அடைக்கிறார்கள். தூணிலே சாமியிருக்கிறாரா? என்றுசொல்லி இரண்யன் தூணை உதைத்தவுடன், இருக்கிறேன் என்பதைக் காட்ட, அதிலிருந்து வெடித்து வெளி வந்து இரண்யனின் குடலைப்பிடுங்கிமாலையாகப்போட்டுக் கொண்டு பக்தர்களை மகிழ்வித்த நரசிம்மசாமியே! உன்னையே பிடித்து சிறையிலே போட்டுவிட்டாரே இந்த ஓமாந்தூர் ராமசாமியார்! ஒரு வேளை உன்னைவிட பெரிய சாமியா? இந்த ஓமாந்தூர் ராமசாமியார். ஓமாந்தூர்சாமியே நீயே கதி என்று நரசிம்மசாமிகள் தவம் செய்தார்கள் சிறையில். இன்னும் செய்யப்போகிறார்களாம்!

"மு. ராஜமாணிக்கம்"

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பால் கொடுக்கிறாள், ஒருவள் புழக் கடைப் பக்கம் போயிருக்கிறாள், இப்படி வேலையிலிருப்பவர்கள் எதிரிலேயே வந்து எப்படி கையெழுத்துப் போடமுடியும்? கொடுத்தால் கொடு, இல்லாவிட்டால் போ! எனக்கு வீட்டு வரி கட்டுகிற 25-ஓட் இருக்கிறது'' என்று கூறி சீறிவிழுகிறார். செல்வத்தின் செருக்கு எப்படியிருக்கிறது?

அவரின் கணக்குப்படி, அவருக்கு நான்கு மனைவிகள். 21-வயதுக்கு மேற்பட்ட மகள் இரண்டு பேர். வீட்டில் வேலைக்காரர்கள் இரண்டுபேர் இருக்கிறார்கள். அவர்களைப் பதிவு செய்ய மறுத்துவிட்டார். அந்த வீட்டுப் பெண்கள் உண்மையில் ஒருவேலையும் செய்யவில்லை. அங்குமிங்கும் உலவிக்கொண்டுதானிருந்தார்கள். வீட்டு மொழியிலே உள்ளுக்குப் போய்விடச் சொல்லி விட்டார். இந்த வாக்கு மூலங்களைக் கேட்டுப் பதிவு செய்து கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் பதிவாளன் மேல் வீண்பழி கூறுவதா?

இப்படிச் செய்தவரின் உண்மை நோக்கம் என்னவென்றால், ஒரு பதிவாளன் முன்னிலையில் "என் குமரி மனைவிகளைக் கொண்டு வந்து கையெழுத்துப் போடச்சொல்லுவதா''? என்பதுதான். எப்படியிருக்கிறது இந்த நான்கு பெண்டாட்டிக்காரரின் போக்கு?

அப்படியானால் வேறொரு ஆணையே அவர்கள் யாரும் காணவே கூடாதா? பத்தினித்தனம் பாழ்பட்டு விடுமென்று பயப்படுகின்றாரா? அப்படிச் செய்வதுதான் பத்தினித்தனம் என்று அந்தப் பெரிய மனிதர் என்று நினைத்துக்கொண்டிருப்பவர் நினைக்கின்றார் போலிருக்கிறது!

இந்த விதமாகப் பாலன் பதிவு வேலையை அந்த வீதியில் முடித்துக் கொண்டு, அடுத்த வீதிக்குச் சென்றான். அதை வீதி என்றா சொல்லுவது. ஆத்தோரத்தில் போடப்பட்டிருந்த கூரைக் குடிசைகள். அவைகளும் அவன் பதிவு செய்ய வேண்டிய பட்டியலில் சேர்க்கப்பட்டவைகள் தான். சேரிதான்! அவன் இனத்தவர் வசிக்குமிடந்தான் அது. அவர்களுக்குமா ஓட்டுரிமை? நாட்டிலே நடைப் பிணங்களாயிற்றே! ஓட்டை உபயோகிக்கத் தெரியுமா! கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடுவானேன். ஓட்டுரிமை பெறுவது, நாட்டிலே நடமாடும் மனித இனத்திலே தான் நானும் சேர்ந்தவன் என்பதைக் காட்டுவதல்லவா? அதில் என் வர்க்கத்தினருக்கு ஏன் தடை?

குடிசை குடிசையாகத் தேடி, அந்த வந்த ஆள்கூடக் கிடைக்கவில்லை. எல்லோரும் புளி விற்கப் போய்விட்டார்கள். இல்லாவிடில் வயிற்றுக்கு கஞ்சி ஏது? புளி வியாபாரியிடம் கூடைகளில் புளி வாங்கிக்கொண்டு சென்று, வீதிவீதியாகச் சுற்றி, கிராமம் கிராமமாகச் சுற்றி விற்று மீதியுள்ள புளியையும் பணத்தையும் வியாபாரியிடம் சேர்ப்பித்தால், அந்த வியாபாரி அதில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கூலியாகக் கொடுப்பார்.

இவர்கள் காலையில் ஆறு மணிக்கே சென்று மாலை எட்டு மணிக்குத்தான் திரும்புவார்கள். இந்நிலையில் பாலன் தேடிய பகல் வேளையில் எவரேனும் கிட்டுவாரா? ஒரு யோசனை தோன்றிற்று, எட்டு மணிக்குப் பிறகு வர வேண்டுமென்று. வேண்டுமானால் செய்திருக்கலாம், வீடுகள் எல்லாம் பூட்டிக் கிடந்தனவென்று! எத்தனையோ பேர் அப்படியும் செய்தார்கள் ஆனால் அவன் செய்யவில்லை. வீடு தவறாது பதிவுசெய்து கொண்டுதான் வந்தான். இரவு எட்டு மணிக்கு அரிகேன் லைட்டுடன் காட்சியளித்தான். அந்தச் சேரியில் எல்லோரும் அரிசிக் கணக்குக்காரன், (ரேஷன் செக்கிங்) (இது அவர்களாக வைத்துக் கொண்ட பெயர்) வந்துவிட்டான் என்று தான் பேசிக்கொண்டார்கள். உள்ளதைச் சொல்லவும், ஒருவரும் பதுங்கவில்லை அல்லது ஒண்டிக் கொள்ளவில்லை; வேலை செய்து கொண்டிருந்தவர்களெல்லாம் தங்கள் வேலைகளையெல்லாம் விட்டு விட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் என்ன பள்ளிக்கூடத்தையா பார்த்திருக்கிறார்கள் கையெழுத்தாகிலும் கற்றுக்கொண்டிருக்க? அந்த ஊரில் நூற்றுக்கு மேற்பட்ட ஆரம்பப்பள்ளிகளும் சில உயர்தரப்பள்ளிகளும், கல்லூரிகளும் இருந்துதான் வருகின்றன. எத்தனைதான் இருந்தும் அவர்களில் ஒருவருக்கேனும் பயன்படவேயில்லை

"பெண்கள் எல்லாம் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். பையனிடம் கொடுத்தனுப்புங்கள் கையெழுத்து வாங்கிக்கொண்டு வந்து விடுவான்'' என்று யாரும் அங்கு சொல்லவேயில்லை, சுத்தக்கதர் காட்டினவர்களும் அங்கில்லை.

எல்லோரும் கைரேகைதான் வைத்தார்கள். எல்லோரின் இடதுகைப்பெருவிரல்களையெல்லாம் பாலனே பிடித்துத்தான் ரேகைவாங்கினான். பருவப் பெண்களுந்தானிருந்தார்கள்; ஆனால் பத்தினித்தனம் பழுது பட்டுவிடும் என்று எவரும் அங்கு நினைக்கவேயில்லை.

ஒருவரையும் விடாமல் தான் பதிவு செய்தான். அதை அவன் தன் கடமை என்றும், கடமையில் தவறக் கூடாது என்றும் எண்ணினான்.

பஞ்சாங்கத்தின் கணக்குப்படி அன்று சந்திரன் வரவேண்டும். ஆனால் மேகம் சூழ்ந்து கொண்டது. அதற்கு முனிசிபாலிட்டியா பொறுப்பாளி? அந்தச் சேரிக்கும் விளக்கு இல்லை, அதை ஒட்டிச் சிறிது தூரத்திற்கும் விளக்கு இல்லை. ஆற்றோரமாகவே பாலன் சிறிது தூரம் சென்றான். ஒரு சிறு பாலம், அருகில் கற்பாறைகளினிடையே இருட்டில் ஒரு உருவம் சென்று கொண்டிருந்தது. என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. அய்யோ! என்ற சப்தம்.

அடுத்தநாள்; பதிவாளர் கணக்கைத் தாசில்தாரிடம் சமர்ப்பிக்கும் நாள். ஒருபதிவாளன், பாலன் என்பவன் மட்டுமில்லை.

ஏமாற்றி விட்டான் என்று தான் பேசிக்கொண்டார்கள். ஆனால் யாருக்குத்தெரியும் அந்த உண்மைப்பதிவாளனின் உடல் ஆற்றோரமுள்ள பாறைகளினிடையே பிணமாகக்கிடப்பது?

●


கவிஞர் பாரதிதாசன்.

| | | | |
|---|---|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 |
| பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 |
| எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 |
| அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| தமிழ் இயக்கம் | 1 | 0 | 0 |
| காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| இசையமுது | 0 | 12 | 0 |
| முல்லைக்காடு | 0 | 12 | 0 |
| நல்லதீர்ப்பு | 0 | 10 | 0 |
| கவிஞர் பேசுகிறார் | 0 | 10 | 0 |
| குடும்பவிளக்கு I | 0 | 10 | 0 |
| ,, II | 0 | 6 | 0 |
| அமைதி | 0 | 8 | 0 |

அறிஞர் அண்ணாதுரை.

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| சிறுகதைகள் | 1 | 0 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| உலக பெரியார் காந்தி | 1 | 0 | 0 |
| ரேடியோவில் அண்ணா | 0 | 12 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| மகாத்மா காந்தி | 0 | 3 | 0 |

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இடங்கொடுக்கவில்லை. இவ்விரு நாடுகளின் உயர்வு தாழ்வுகளைச்சமன்செய்யும் ஆற்றல் படைத்த ஒருவர்தான் திராவிட இயக்கமாகஇன்று பணியாற்றி வருகிறார்.

## பிரிந்தால் வாழ முடியுமா?......

இன்று சிலர் கேட்கிறார்கள், திராவிட நாடு பிரிந்தால் தனித்து வாழ முடியுமாஎன்று. நிச்சயமாகத்தனித்து வாழ முடியும். இன்றைய நிலையைக் காட்டிலும் பன்மடங்கு உயர்நிலையில் வாழ முடியும் என்று அதிதிடமாகச் சொல்லுவேன்.

* *

ஒன்றும் கிடைக்கா விட்டால் தான் என்ன? மற்ற மேலை நாடுகளைப் போல் கிடைத்த உலோகத்தைக் கொண்டே நமக்குத் தேவையான உலோகத்தைச் செய்து கொள்ள முடியாதா? எல்லாஉலோகப்பொருள்களும் ஒரே மூலதாதுப் பொருளிலிருந்து தான் உண்டாகின்றன. எனவே ஒன்றோடு ஒன்றைச்சேர்ப்பதன் மூலமோ அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிப்பதன் மூலமோ எப்பொருளையும் உண்டாக்கிக்கொள்ளமுடியும். விஞ்ஞான முறைப்படி என்று கண்டு பிடிக்கப்பட்ட பிறகு நாம் என்னசோடைகளா, ஒரு பொருளுக்காக வேறு நாட்டைஎதிர்பார்த்துக்கொண்டிருக்க?

* *

இயற்கை வளங்கள் நிறைந்த நாட்டில் வாழும் எங்களுக்கு பிழைக்கும் வழிதானா தெரியாது! வாணிபம் செய்யத்தெரியாதா அல்லது துறைமுகங்கள்தான் இல்லையா எங்களுக்கு? உலகத்திலேயே முதன் முதலாகக் கப்பல் கட்டி வாணிபம் நடத்தியவர்கள் திராவிடர்களாயிற்றே. உலகம் உணராமுன்னமே உள்நாட்டுநகரத்திற்கும் கடற்கரையோர நகரத்திற்கும் வெவ்வேறு பெயர் கொடுத்து வழங்கியவர்களாயிற்றே தமிழர்கள். பட்டினமும், பட்டணமும் எனகிறஇரு சொற்கள் எத்தனையோகாலமாகத் தமிழ் நாட்டில் வெவ்வேறு பொருளுடன் வழங்கிவருகின்றனவே.

* *

சென்னைப் பட்டினம் என்பதற்குப் பதிலாக சென்னைப் பட்டணம் என்றுதானே பலர் வழங்கி வருகின்றனர். ஹிந்தி வருமுன்னரே இக்கேடென்றால் ஹிந்தி வந்த பிறகு என்னாகும் என்று சொல்லவும்வேண்டுமோ? இன்று விசாகப் பட்டினம் என்கிற ஒரு இடத்தில் தான் கப்பல்தளம் இருக்கிறதென்றால் திராவிடநாடு பிரிவினையானதும் எத்தனையோ விசாகையக்ளக் காண முடியுமே?

ஆள்பவர்களுக்குள் ...?

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டில் தலை விரித்தாடிக் கொண்டிருக்கும் தரித்திரத்தை எங்களால்போக்கிக் கொள்ள முடியுமே. தனித்தியங்கும் நாடுகளைப் பிரித்துத் தனியாக இயங்கும்படிச்செய்து ஏதோ சொற்ப அதிகாரங்களை மட்டும் மேலெழுந்தவாரியாக மத்திய சர்க்காருக்கு வைத்துக் கொள்வதைவிட்டு இமயம் முதல்குமரி வரை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று பாடு பட்டு வருகிறார்களே அது சாத்யமா? யோசித்துப் பார்த்தார்களாஇவர்கள்?வங்காளத்தை ஒன்றாக்க முடிகிறதா? அய்க்கிய மாகாணமக்களுக்கு சமாதானம் சொல்ல முடிகிறதா? எங்கே இருக்கிறது ஒற்றுமையும்ஒருமைப்பாடும்? காங்கரஸ்காரர்களிடையேயாவது காணப்படுகிறதா ஒருமைப்பாடு, இவர்கள் ஆளும் இந்தியாவில் ஒருமைப்பாடு இருக்க?

## பட்டேலிஸக் காங்கரஸ் பட்டொழிக!

நாங்கள் பன்னெடுங் காலமாகப் பாடுபட்டு வளர்த்த காங்கரஸ் இன்று சாகும் நிலைக்கு வந்து விட்டதே எங்கள் கண்முன்னாலேயே. எத்துணை பெரியவர்கள்காங்கரசின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தார்கள். பெசண்ட் என்ன, சுரேந்திரநாத்பேனர்ஜிஎன்ன, தாதா பாய் நௌரோஜி என்ன, ஒரு திலகர் என்ன, ஒரு கோகலே என்ன. ஒரு காந்தியார்தான் என்ன. இவர்கள் வளர்த்த காங்கரசாஇன்றுநம்கண்முன் காணப்படுகிறது. இல்லை. இல்லை. இல்லை. பின் யாருடைய காங்கரஸ் காணப்படுகிறது என்றுகேட்கிறீர்களா? சர்தார் வல்லபாய் பட்டேலின் காங்கரஸ்—பாஸிசக்காங்கரஸ். இதுதான் இன்று என் கண்ணுக்குத் தெரிகிறது.

* *

இந்த படேலிசக் காங்கரசைத்தான் நாங்கள் ஒழியவேண்டும் என்கிறோமே ஒழிய காந்தியின் காங்கரசையல்ல என்பதை நீங்கள் அறியுங்கள். உலகம் அறியட்டும். இந்நாட்டுப் பாட்டாளிகளின் வயிற்றில் அடிக்க, இந்நாட்டில் உரிமைப்போர் தொடுத்து நின்ற தொழிற்சங்கங்களை அழித்து ஒழிக்கத் தேசியத் தொழிற்சங்கம் என்ற பேரால் ஒரு முதலாளித்துவ ஆதிக்க ஸ்தாபனத்தைத் தோற்றுவித்த தொழிலாளர் துரோகி பட்டேலுடைய காங்கரஸ் ஒழியவேண்டுமென்றுதான் நாங்கள் ஆசைப்படுகிறோம். இந்தப் பட்டேல்தான் எத்தனைநாள் இருக்கப் போகிறார் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு? தம் சுரண்டலை ஆதரிக்கும் வரை தானே குஜராத்திக்காரர்களும் இவரை ஆதரிக்கப்போகிறார்கள்? அப்புறம் இவர் வாழ்வும் அம்பலம்தானே.

* *

தோழர்களே! [illegible]

இருந்தது. ஆகஸ்ட் 15ம் தேதி அதிகாரம் மாறிய அன்றே என் மனமும் மாறி விட்டது. சுதந்தரம் வந்து விட்டதாகக் கருதப்பட்ட அன்றைய தினமே காங்கரஸ் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். கலைக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும். காங்கரஸ் இவ்வளவு கீழ் நிலைக்கு வருவதைக் காணவேண்டியிருக்காது.

* *

40 ஆண்டுக் காலத்திற்கு மேலாக நாங்கள் உழைத்து உழைத்து வளர்த்து வந்த காங்காஸ், தொழிலாளர்களுக்குள்ள எல்லாக் குறைகளையும் போக்கும் என்ற நம்பிக்கையில்' தொழிலாளர்களால் வளர்க்கப்பட்டு வந்த காங்கரஸ், முடிவில் தொழிலாளர்களின் வயிற்றிலேயே அடிக்க ஆரம்பித்து விட்டதென்றால் அத்தொழிலாளர்களை காங்கரசைப் பின்பற்றி நடக்கும்படி செய்த எங்கள் மனம் பொறுக்குமா?

* *

தோழர்களே! எனக்கும் பெரியாருக்கும் உள்ள நட்பின் பெருமையை நீங்கள் உள்ளபடி உணர்ந்திருக்கமாட்டீர்கள்! நாங்கள் இருவரும் சற்றேறக்குறைய ஒரே நேரத்தில் காங்கரசில் சேர்ந்தோம். ஒரே நேரத்தில் காங்கரசை விட்டு விலகினோம். ஒரு முறை காஸ்மோபாலிடன் கிளப்பில் நாங்கள் இருவரும் கூடி தோழர் ஷண்முகம் செட்டியார் முன்னிலையில் காங்கரசிலிருந்து விலகிக் கொள்வதென்றும், மறுபடி இருவரும் கலந்து பேசிக்கொள்ளாமல் எப்போதும் அவ்வியக்கத்தில் சேர்வதில்லை என்றும் முடிவு செய்து கொண்டோம். அம் முடிவுப்படியேதான் நாங்கள் இதுவரையும் நடந்து வந்திருக்கிறோம்.

## துரோகியின் அழைப்பு! தொல்லையின் பெருக்கு!

ஆகஸ்ட் 15ம் தேதிக்குப்பிறகு காங்கரசை மறந்து விட்டு, தொழிலாளர் இயககத்தையும் மறந்துவிட்டு ஒதுங்கி விட்டேன் பூர்ண ஓய்வுடன் இருக்க விரும்பி. அதுசமயம் டி. எஸ். எஸ். ராஜன் வாயிலாக எனக்கோர் அழைப்பு வந்தது. அதை நான் இயற்கையின் எச்சரிக்கையாகக் கருதிக் கொண்டேன். "உன்னுடைய பழைய சங்கமாயிற்றே, அங்கு வேலை நிறுத்தம் நடக்கிறதே, கொஞ்சம் சொல்லிச் சரிப்படுத்தேன், அந்தோணிப்பிள்ளையை அழைத்துக் கொண்டு போய் முதலாளிகளிடம் சமாதானம் செய்து கொள்ள முயற்சி செய்து விட்டு வெள்ளியன்று காலை வந்து காணுங்களேன்" என்று கனம் ராஜன் அவர்கள் கூறினார். சரி என்று ஒப்புச்கொண்டு தோழர் அந்தோணிப் பிள்ளையைக்

பேசி விட்டு வெள்ளியன்று காலை மந்திரியைக்காண இருந்தேன். ஆனால் என்ன கண்டேன் வெள்ளியன்று காலை? அந்தோணிப்பிள்ளை விடியற் காலை வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றுதான் கண்டேன். அப்போது என்ன வேதனைப் பட்டிருக்கும் என் மனது?

* *

யான் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கரஸ் எனக்கே துரோகம் செய்யத் துணிந்ததென்றால், என் மனம் எவ்வளவு பாடுபட்டிருக்கும்? சிந்தித்துப்பாருங்கள்.

## நாட்டுப் பிரிவினையே, பாட்டாளிக்கு மறுமலர்ச்சி!

ஒதுங்கியிருந்த என்னை இத் துரோகி ஏன் அழைக்கவேண்டும் என்று ஆலோசித்தேன். "ஏன் ஒதுங்கியிருக்கின்றாய்? தொழிலாளர்கட்கு மீண்டும் பணி செய்" எனறு இயற்கை எனக்கு எச்சரிக்கை செய்ததாகவே நான் அதை எடுத்துக்கொண்டேன். மறுபடி தொழிலாளாகள் போராட்டத்தில் ஈடுபட்டேன். போராட்டக் காலத்தில் மீண்டுங்கண்டேன், காங்கரஸ் ஸ்தாபனம் எவ்வளவு பற்போக்கு அடைந்து விட்டது என்று. அந்தச் சமயமெல்லாம் சிங்காரவேலர் அடிக்கடி என் மனக்கண்முன் தோன்றினார். அவர் கூறியவைகளைப்பற்றி நினைக்க நினைக்க திராவிடநாடு பிரிந்தாலொழிய தொழிலாளர்களின் வாழ்க்கை மலர்ச்சியடையாது என்றே எனக்குத் தோன்றியது.

* *

அத்தொழிலாளர் போராட்டத்தின் போது பலர் என்னை விட்டுப் பிரிந்தார்கள், பலர் கலங்கினார்கள். பெரியார் கலங்கினாரில்லை, வந்தார்என்னுடன், வீரஉரை ஆற்றினார். அப்போராட்டம் இன்னும் முடிவடையாமல் தான் இருந்துகொண்டிருக்கிறது.

* *

திராவிடக் கழகம் தன் அறப் புரட்சியின் மூலம் வெற்றி பெறும்போது தான் தொழிலாளர் வாழ்வும் மலரும்.

## அகிம்சை மூலம் சுயராஜ்ஜியம் அதன் பயனோ ஹிம்சை மயம்.

புரட்சியில் இருவகையுண்டு. ஒன்று அறப்புரட்சி அதாவது அகிம்சை புரட்சி. மற்றொன்று மறப்புரட்சி அதாவது ஹிம்சைப்புரட்சி. நமது அண்ணாத்துரை அவர்கள் குறிப்பிட்ட ப்ரென்சுப்புரட்சியும் ரஷியப்புரட்சியும் மறப்புரட்சிகள். ஹிம்சையின் மூலம் வெற்றி கண்ட புரட்சிகள். அவைமேல் நாட்டுப் புரட்சிகள். நம் காந்தியார் நடத்திய புரட்சியோ அகிம்சைப் புரட்சி. ஆனால் அதன் மூலம் பெற்ற சுயராஜ்யமோ ஹிம்சை மயமாக மாறி விட்டது, சுயராஜ்யம் வந்த பிறகு சுயராஜ்யசர்க்கார் அகிம்சாவாதிகளின் மீதே குண்டுகளை வீசி வருகிறார்கள். சாத்வீக மறியல் செய்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்து குண்டாந்தடிகளால் அடித்து தொழிலாளர்களைப் பயமுறுத்தி யிருக்கிறார்கள். ஆனால் லெனின் மறப்புரட்சியின் மூலமேவெற்றிபெற்றார் என்றாலும் வெற்றிக்குப் பிறகு அவர் எவ்வளவோ சாத்வீகமானவர் ஆகிவிட்டார்.

* *

வெற்றிக்குப் பிறகு பலாத்காரம் தலைகாட்ட அவர் அநுமதித்தாரில்லை. ஆனால் பட்டேல் துரையோ ஆட்சிக்கு வந்ததும் அறத்தை மறந்து அக்கிரமத்திற்கு இறங்கிவிட்டார். தேசீயத் தொழிலாளர் சங்கம் என்றொரு சங்கத்தை நிறுவி வாழ்த்தி இதர தொழிற்சங்கங்களை நசுக்கத் தொடங்கிவிட்டார். தொழிலாளர்கள் உரிமைகள் பறிபோய்க் கொண்டிருக்க அதைப்பார்த்து களித்துக்கொண்டிருக்கிறார், முதலாளிகளுடன் குலாவிக்கொண்டு. இதுவா ஜனநாயகம்?

* *

இந்நாட்டில் காங்கரஸை வளர்க்க தோளோடுதோள் கொடுத்து சமநிலையில் நின்று பாடுபட்டவர்கள் பெரியாரும் ராஜகோபாலாச்சாரியாரும். இருந்தும் ராஜகோபாலாச்சாரியார் சென்னைக்கு நாளை வருகிறார் என்றால் இன்றே பெரியாருக்குச் சிறை வாசம் கிடைக்கிறது. என்னே ஜனநாயகத்தின் விந்தை! சுயராஜ்யத்தின் பெருமை!!

## அய்யோ! புத்திசாலி மந்திரிகளே!

ஹிந்தி எதிர்ப்பை ஆதரித்து ஒரு கட்டுரை எழுதினாராம் யாரோ ஒரு பள்ளி ஆசிரியர். உடனே அவருக்கு வேலைபோய்விட்டதாம். இந்தயாதிரி புத்திசாலி மந்திரியை யாரும் குற்றங் கூறக்கூடாதாம்! பிறர் குற்றங்கூறின் அதற்குத் தக்க சமாதானம் சொல்லவோ, அல்லது அதைத் திருத்திக் கொள்ளவோ அல்லது குற்றத்திறகாக வருந்திப் பொறுத்துக் கொள்ளவோ முடியாவிட்டால் மந்திரியாக ஏன் இருக்கின்றீர்? வெளியேறி விடுவது தானே! கெட்அவுட்! இடத்தைக் காலி செய்வது தானே! ஜனநாயகத்துவத்திற்கே இழுக்கு வரும்படி ஏன பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? காலி செய்து விட்டு வேறு அறிவாளிகளுக்கு இடங்கொடுங்களேன்!

## ஓய்! மந்திரிமார்களே! உளறலை நிறுத்துவீர்! உண்மையை உணர்வீர்!

எவ்வளவு எடுத்துக்கூறினாலும் ஆரியரும் திராவிடரும் ஒன்றென்று பிதற்றிக்கொண்டு வருகிறீர்களே! ஆராய்ச்சி நூல் ஏதையேனும் படித்துப்பார்த்ததுண்டா நீங்கள்? ஆரியக் கலை வேறு, திராவிடக் கலை வேறு; ஆரியப்பண்பு வேறு, திராவிடப்பண்பு வேறு என்பதை ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்களே!

திருக்குறள் ஒன்றே போதுமே ஆரியத்தையும் திராவிடத்தையும்பிரித்துக்காட்ட. திருக்குறளில் அறம், பொருள், இன்பம் இம்மூன்றைப்பற்றித்தானே எழுதியிருக்கிறது. வீட்டைப்பற்றி,மோக்ஷத்தைப்பற்றிக்குறிப்புக்கூட காட்டவில்லையே திருவள்ளுவர்! திருவள்ளுவர் ஒன்றும் நாஸ்திகர் அல்லவே! இருந்தும் ஏன் மோட்சத்தைப்பற்றிப் பேச மறுத்தார்? திருக்குறள் திராவிடப்பண்பை விளக்கும் நூல். எனவே ஆரியப் பண்பான மோட்சத்திற்கு அதில் இடம் இருக்கக்கூடாது என்பதால் தானே!

* *

வீட்டுக்கு எல்லை கட்டியவனாயிற்றே தமிழன்! அறம், பொருள், இன்பம் இவற்றினோடு தன் வாழ்க்கைக்கு எல்லையை நிர்மாணித்துக் கொண்டவனாயிற்றே தமிழன்! தொல்காப்பியர் முதல், திருவள்ளுவர் ஈறாக எந்தத் தமிழனும் இவற்றைத்தாண்டி எதும் இருப்பதாகச் சொல்லவில்லையே! "கேபிடல்" என்கிற உலகம் போற்றும் பொருளாதாரத் தத்துவ நூலை எழுதிய கார்ல்மார்க்ஸ் என்பவரும் இதைத்தானே கூறியுள்ளார்! திருவள்ளுவர் கூறிய அறம், பொருள், இன்பம் இவற்றுடன் நின்ற வரை தமிழர்கள் தம் நாட்டை இழந்தாரில்லை. நாகரீகத்தில், அறிவு வளர்ச்சியில், எதிலும் குறைந்தாரில்லை.

* *

அப்புறம் ஆரியத்தின் மோட்சலோக பித்தலாட்டத்தை ஏற்று இவ்வுலக வாழ்க்கையே வீண் எனறும் அறம், பொருள், இன்பம் இவையாவற்றையும் துச்சமெனத் தள்ளி விட்டு மோட்ச லோகத்தை எதிர்பாரத்து நிற்பதே பேரின்பம் என்றும், கருதத் துவங்கியதிலிருந்துதானே தமிழர்கள் தாழ்ந்தனர்? தமிழகம் தாழ்ந்தது? வேதாந்தம் தமிழ்நாட்டில் வேர்விடத்தொடங்கிய பிறகுதானே தமிழன் சாகத் தொடங்கினான்? தமிழன் தன்மான உணர்ச்சியற்றுப் போகக்காரணமாயிருந்தது இவ்வுலக வாழ்வே ஒரு மாயை (Illusion இல்யூஷன்) என்கிற ஆரியத்துவம் தானே? ஆரிய தத்துவத்தின் அடிப்படை இதுவல்ல என்று யாராவது கூறமுடியுமா? திராவிட தத்துவம் இதற்கு மாறுபட்டதல்ல என்றாவது இந்த மந்திரிகளால் எடுத்துக்காட்ட முடியுமா?

* *

உலக வாழ்வு மாயை என்கிற ஆரிய தத்துவம் ஆட்சிக்கு வந்ததும் உலக வாழ்க்கையே மாய்ந்து போயிற்றே, இந்நாட்டைப் பொறுத்தவரை! உயி

குள்ள ஒரு பொருளில்கூட மலர்ச்சியைக்காண முடியவில்லையே! மனிதனே கருகி விட்டான் என்றால் மற்றவை கருகாமலா இருக்கும்? இந்நாட்டைப் பொறுத்தவரை எல்லாம் மாயை என்ற அளவில் அன்பும் அறனுங்கூட மாய்ந்து விட்டனவே ஆரிய ஆதிக்கத்தால்! அறமும் அன்பும் இன்றேல் பின் எவைதான் இருக்கும்? உலகில் எவை எவை நல்லவையோ அவை யாவும் கற்பனைக் கைலாயத்திற்கே பறந்து போய் விட்டனவே. உலகம் உண்மையிலேயே பாழாகி விட்டதே.

* *

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பொருளீட்டி அறம் செய்து இன்பம் துய்த்து வாழ்ந்த தமிழகம் இன்று பொருளாதாரத்தில் அந்நியனுக்கு அடிமைப்பட்டு, அறம் செய்ய வக்கின்றி, இன்பம் எப்படி இருக்கும் என்று தெரியாது' இன்னல் வாழ்க்கை வாழ்கின்றதே! இதை கண்டு திராவிடன் ஒவ்வொருவனும் இரத்தக் கண்ணீர் விட வேண்டாமா?

* *

ஆரிய மாயையை அகற்றி, திராவிடத்தில் மறுபடியும் புத்துணர்ச்சியை உண்டாக்கப் பாடுபட்டு வரும் திராவிட கழகத்திற்கு நீங்கள் யாவரும், தன்மானத் தமிழ்மகன் ஒவ்வொருவனும், உரிமை வேட்கை கொண்ட ஒவ்வொரு தொழிலாளர் தோழனும், உதவி புரிதல் வேண்டாமா?

## ஆட்சி மாறிவிடும்! அதனால் நமக்கென்ன?

ஓமந்தூரார் ஆட்சி ஒழிந்தால் சுப்பராயன் ஆட்சி வரும். சுப்பராயன் ஆட்சி ஒழிந்தால் பிரகாசத்தின் ஆட்சி வரும். இவ்வாட்சிகள் மாறிக்கொண்டிருப்பதால் நமக்கென்ன பயன் கிட்டும்? நாம் வேண்டும் இன்ப வாழ்க்கை கிட்டுமா?

* *

இன்றுள்ள காங்கரஸ் ஆட்சி ஒழிய வேண்டும். அநேகமாக ஒழிந்து கொண்டுதான் வருகிறது. அதனால் தானே சென்னையில் நகர சபைத் தேர்தலுக்கு காங்கரஸின் பேரால் ஆட்களை நிறுத்த காங்கரஸ்காரர்கள் நடுங்கிப்போனார்கள். பின்னர் எல்லைக் கமிட்டியின் பேரால் நிறுத்தியும் மக்கள் ஏமாந்து போய்விடவில்லையே.

* *

இந்த (நேஷனலிஸ்ட் பார்ட்டி, ப்ரொக் ரெஸிவ் கட்சி ஆகிய) இரு கட்சிகளும் ஏறக்குறைய சமபலம் பொருந்தியவை. ஒன்று 33, மற்றொன்று 32 என்று நினைக்கிறேன். இரு கட்சிகளும் ஆல்டர்மென் தேர்தலின்போது மீனாம்பாள் அம்மையாரையே ஆதரிப்பதாகக் கூறினார்கள். இருந்தும் என்ன ஆயிற்று? அந்தம்மாளை எதிர்த்து நின்ற நமது அம்மையார் இந்திராணி பாலசுப்ரமண்யம் அம்மையாருக்குத்தான் வெற்றி கிடைத்தது! அவ்வளவு கட்டுப்பாடற்ற தன்மை அவர்களிடையே! காங்கரஸ் தன் சொந்தப் பேரைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு எல்லைக் கமிட்டி என்றும், நேஷனலிஸ்ட் கட்சி என்றும், கூறித் திரிந்து வருகிறதே!

## பொதுஜனப் பிரதிநிதி என்பது பொய்க்கூற்று!

இவ்வளவுக்கும் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பிறகு, இந்த அளவுக்குப் பிரதிநிதித்வம் போய்விட்ட பிறகு நாங்கள்தான் பொதுஜனப் பிரதிநிதிகள் என்று காங்கரஸ் மந்திரிகள் கூறிக்கொண்டு பவனி வருகிறார்களானால் இவர்கள் சொல்லை ஜனங்கள் நம்புவார்களா? இவர்களோடு ஒத்துழைக்கத்தான் சம்மதிப்பார்களா?

* *

செல்வாக்கை இழந்துவிட்டோம் என்று உணர்ந்தும் சட்டசபையைக் கலைத்துவிடுவதன்றோ ஜனநாயக முறை.

அப்பாடா! இவர்களா கலைப்பார்கள்? சே, சே, உடும்புபோல் அன்றோ இவர்கள் நாற்காலியைப் பற்றிக் கொண்டிருப்பார்கள்! பற்றிக்கொண்டிருப்பவர்களை நாம் எப்படி நீக்குவது? சிதைத்து சிதைத்துத் தள்ளித்தான் நீக்க வேண்டும்!

## 'விடுதலை'க்காகப் பிறந்து 'கேடுதலை'க்காக வாழ்வதா?

காங்கரஸ் இந்நாட்டுக்கு விடுதலை வாங்கித்தரவே தோற்றுவிக்கப்பட்டகட்சி. எனவே ஏதோ ஒரு அளவுக்காவது விடுதலை வந்து விட்டதென்றால் அது மறைந்துவிடவேண்டியதுதானே. அதை விட்டு விடுதலை வாங்கித்தந்த உரிமையின் பேரால் அது மக்களைக் கொள்ளையடிக்கத் துவங்கி விட்டதென்றால் நாம் அதை ஒழிக்க முற்படாமல் இருக்க முடியுமா? காங்கரஸ் இத்தென்னாட்டைவிட்டு திராவிட நாட்டை விட்டு முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

## திராவிடம் என்பதன் சீர்மைதான் என்னே!

நாம் மற்ற தெலுங்கு கன்னட மலையாள பிரதேசங்களிலும் நமது கொள்கைகளைப் பிரசாரம் செய்ய வேண்டும். ஆங்காங்கும் இப்போது வடமொழியின் ஆதிக்கத்தை உணர்ந்து அதை ஒழிக்க முயர்சி நடந்து வருகிறது. நாமும் சேர்ந்து பிரசாரம்செய்வோமானால் விரைவில் வடமொழிக் கலப்பு எடுபட்டு அவர்கள்,தாமும் தூய தமிழர்கள் தான், திராவிடர்கள் தான் என்பதைஉணர்வார்கள். அவர்கள்ரத்தமும் நமது ரத்தமும் ஒன்று தான். அவர்களுடைய பழக்க வழக்கங்களும் ஆசாபாசங்களும் நம்முடைய பழக்க வழக்கங்களும் ஆசாபாசங்களும் ஒன்றாகத்தான் இருந்துவருகின்றன. ஆகவே நாம் நெடுநாள் பிரிந்திருக்க முடியாது, பிறர் என்னதான் சூழ்ச்சி செய்தபோதிலும். எனவேதான் நாம் சிறு எல்லையைக் குறித்துக் கொள்ளவில்லை. பரந்த உணர்ச்சிதான் நமக்கு வேண்டும், இந்த வகையில் திராவிட கழகத்தின் போக்கு மிகவும் பாராட்டுதற்குரியதேயாகும்

## போராட்டத்தின் முடிவு பிரிவினையே!

அன்று சொன்னேன், நிலக்கோட்டையில் எனது கடைசி மூச்சுகூடத் திராவிடம் வாழ்க! திராவிடர்கழகம் வாழ்க! என்பதாகஇருக்கும் என்று. இன்று துணிவுடன் கூறுகிறேன் இன்னும் 10 ஆண்டுகளில் திராவிடநாடு பிரிந்து தனி அரசாகத் திகழுமென்று.

* *

திராவிடகழகம்இன்று தன்னகத்தே எடுத்துக்கொண்டிருக்கும் ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் வெறும்மொழிப் போராட்டம் மட்டும்அல்ல. அதில் அரசியல், சமூகம், பொருளாதாரம் மற்றும் பலவும் உண்டு. நல்லஎண்ணங்கள் உண்டு. தமிழ் தூய்மை அடைய வேண்டும் என்கிற முக்கிய கருத்தும் உண்டு.

* *

இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டதுபற்றி காங்கரஸ்அன்பர்கள் ஹிந்தியை எதிர்க்குமளவுக்கு திராவிட கழகத்தோடு ஒத்துழைப்பதாகப் பேசிக் கொண்டனர். இங்கே நான் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைக்கும் அளவுக்கு, அதற்கு எல்லை குறிக்கும் அளவுக்கு திராவிடகழகத்தோடு ஒத்துழைக்க முன் வந்துவிட்டேன்.

## செய்தித்தாள்களின் சீர்கெட்ட நிலைமை!

சென்ற 30 ஆண்டுகள் எங்காவது நான் மூச்சுவிட்டால் 3 கலம் வெளியிட்டுவந்த பத்திரிகைகள் இன்று நான் திராவிடக் கழகத்திற்கு ஆதரவு தர ஆரம்பித்தது முதல் 3 வரிகூட வெளியிடக் கஷ்டப்படுகின்றன. ஒரு பத்திரிகைகூட ஒழுங்குற சேதிகளைப் பிரசுரிப்பதில்லை.

* *

நாம் விடாது முயற்சித்து வருவோமானால் இந்த "ஹிந்துவும்" 'சுதேசமித்திரனும்' யாவும் நம் சொந்தப் பத்திரிக்கைகளாகிவிடும்.

## எட்டாதபோனால் காலைப்பிடி!

நமக்குத்தான் வெற்றிகிடைக்கும் என்றால் எல்லாவற்றையும் மறந்து

விட்டு நம்மைப் போற்றத் துவங்கிவிடுவார்கள். அவ்வளவு புத்திசாலிகள் அவர்கள். முதலில் ஆனமட்டும் நம்மை நசுக்கப்பார்ப்பார்கள். அடக்கப் பார்ப்பார்கள். நமது முயற்சிக்குப் பாதகம் விளைவிக்க எல்லா வழிகளாலும் முயற்சிப்பார்கள். தம் முயற்சியில் வெற்றி கிடைக்காது என்று கண்டார்களேயானால் உடனே தாமும் திராவிடர்கள் தான், பஞ்சத்திராவிடம் என்று ஸ்மிருதியில் கூறியிருப்பது தங்களையும் சேர்த்துத்தான் என்று கூறிக்கொண்டு, நம்முடன் சேர்ந்து கொண்டு விடுவார்கள்.

### இனப்போர் எளிதான செயலன்று!

அந்த நிலைக்கு அவர்கள் வருமுன் நாம் பலமேடு பள்ளங்களைக் கடக்க வேண்டியிருக்கும், பெரிய பெரிய மலைகளைத் தாண்டிச்செல்லவேண்டியிருக்கும். கடல்களை, சமுத்திரங்களை தாண்டிச் செல்லவேண்டியிருக்கும். எரிமலைகளைத் தாண்டவேண்டியிருக்கும். என்றாலும் எத்தகைய ஆபத்தையும் எதிர்த்துப் போராடி முன்னேறிக்கொண்டு போக வேண்டியதுதான்.

* *

இனப் போராட்டம் என்பது, சமூகப்போராட்டம் என்பது, அதிலும் ஆரியத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதென்பது மிகக்கஷ்டமான வேலைதான். ஏன்? ஆரியர்கள் மனிதர்கள் அல்லர், ஒருநாகரிகமற்ற, மனிதத் தன்மையற்ற காட்டுமிராண்டிகள். எனவே வாய்மையும், தூய்மையும் நிறைந்துள்ள திராவிடர்கள் அத்தகையகாட்டுமிராண்டிகளுடன் போராட்டம் நடத்துவது கஷ்டம்தான். என் செய்வது? போராட்டம் நடத்தித்தான் ஆகவேண்டும்; திராவிட சமுதாயம் மீண்டும் தம் இன்ப வாழ்க்கையை எய்தவேண்டுமானால்.

### திராவிடத்தில் "மதம்" 'மக்கள்' நிலை என்ன?

சிலர் திராவிடநாடு வந்து விட்டால் எல்லோரும் நாஸ்திகர்களாக ஆகிவிட வேண்டியிருக்குமா என்று கேட்கிறார்கள். இல்லை. இல்லை. எல்லா மதமும் எல்லாவகையாலும் பிரசாரம் செய்து கொள்ள உரிமை இருக்கும். ஆனால் ஒன்றுக்கொன்று முட்டிக் கொள்ள அநுமதிக்கப்படமாட்டாது. எந்தஒரு மதத்தையும் யார்மீதும் கட்டாயப்படுத்தவும் அநுமதி கிடைக்காது. அரசாங்கம் மட்டும் மதச் சார்பற்றதாக இருக்கும். எந்தமதத்திற்கும் எந்தசலுகையும் இருக்காது. மதத்தின் பேரால் காசு கரியாக்கப்படவும் முடியாது. மக்களின் உரிமைக்காகப் பாடுபடும் எல்லாக்கட்சிகளும் இருக்க உரிமை இருக்கும்.

* *

பாடுபடும் பாட்டாளி மக்களின் நலன் முதலில் கவனிக்கப்படும். மனி


## படித்துவிட்டீர்களா?

(●)

இந்தி எதிர்ப்புக் கவிதைகள்!
"சிரிக்கும் வையம்" விலை அணா 0—4—0

உணர்ச்சியூட்டும் இயக்கப் பாடல்கள்!
"திராவிடநாட்டுப் பிரிவினைப் பாடல்கள்" 0—6—0

பெரியாரின் சங்கநாதம்!
"தில்லையில் பெரியார்" விலை அணா 0—8—0

அறிவுக்கு விருந்தான ஆராய்ச்சி நூல்!
"நரகாசுரப் படுகொலை" விலை அணா 0-12—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்குமிடம்:—
நாதன் கம்பெனி, கச்சேரி வீதி, ஈரோடு.


எவ்வித வேற்றுமையும் இல்லாமல் நடத்தப்படுவார்கள்.

### இயற்கைக்கு முரண் இந்திமொழி!

இந்தி ஒரு போதும் இந்நாட்டின் பொது மொழியாக வராது. வரவும் முடியாது. வங்காளிகள் ஹிந்தியை ஒரு போதும் ஒப்பார்கள். மராத்தியரும் ஒப்பார்கள். குஜராத்தியரும் நாளாக ஆக ஒப்புக்கொள்ள மறுப்பர். மேலும் இயற்கை மொழியுமல்ல அது. இயற்கை மொழியல்ல என்பதோடு அது முற்றிலும் இயற்கைக்கு முரண்பட்ட மொழியாகவும் காணப்படுகிறது.

### மந்திரிமார்களே! வரும் பொருள் உணர்மின்!

மந்திரிகள் கொஞ்சம் பொது நோக்குடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏன் போராட்டம் நடைபெற வேண்டும்? தடியடிக்குள்ளாக்க வேண்டும் தாய்மொழி காக்க முன்வந்தோரை? நேற்றுவரை தவறாக நடந்திருக்கலாம். இருந்தாலும் அதை மறந்து விட முடியும். போராட்டம் துவங்குமானால் அது சீக்கிரம் நிற்கப்போவதில்லை. வெற்றிபெறும்வரை நடைபெற்றே தீரும் என்பதை மந்திரியார் உறுதியாக நம்பலாம். எனவே எப்போதாயினும் உத்தரவை மாற்றியே ஆகவேண்டி வரும். எனவே பலரைச் சிறையிலடைத்தோ, தடியாலடித்தோ துன்புறுத்துமுன் அவ்வுத்திரவை முதன் மந்திரியாரேனும் மாற்றிவிடுவது சாலச் சிறந்தது.

* *

அப்படி மாற்றும் அளவுக்குத் தமக்கு உரிமையில்லையானால் அவ்வளவு கேவலமான அடிமையாக ஆட்சி நடத்துவதை விட அப்பதவியை வீசி எறிந்துவிட்டு வெளியே வரவேண்டியதுதான். ஓமந்தூராருக்கு இவ்வளவு துணிவு பிறக்கும் என்றே நினைக்கின்றேன்.

தோழர்களே! ஓமந்தூரார் மிகவும் நல்லவர். பதவி மோகம் சிறிதும் இல்லாதவர். எனக்கு உற்ற நண்பர். பெரியாரின் உற்ற சீடர். எதையும் துணிவுடன் செய்யக்கூடிய வீரர்.

* *

அவினாசியாரும் நல்லவர்தான். என்றாலும் அவர் கல்வி இலாக்காவுக்கு தலைமை வகிக்க லாயக்கற்றவர். ஆசிரமங்களுக்கே தலைவராக இருக்கத் தகுதி பெற்றவர்.

* *

ஹிந்தியைப் புகுத்தியதிலிருந்து அவருடைய மனமே கெட்டுக்கொண்டு வருகிறது. கோபத்தாலும் குறுகிய புத்தியாலும் அவருடைய கருவிழிகளே மாறிக்கொண்டு வருகின்றன. என்ன செய்வதென்றே புரியாமல் திணறிக்கொண்டிருக்கிறார். இயற்கையாயுள்ள தமது பிடிவாதத்திற்கு தம்மை ஆளாக்கிக்கொண்டு தம் புலன்களையே கெடுத்துக்கொண்டு வருகிறார்.

### வேண்டாம் அவினாசியாரே!

வேண்டாம் அன்பர் அவினாசியாரே! இந்த வீணான பிடிவாதம். தன்மானத் தமிழனாக வாழ முயற்சி செய்! வடநாட்டானின் காலை வருடிக் கொண்டு குனியும் திராவிட நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்க முடியும் என்று நினையாதே!

* *

காலை வருடிப் பிழைப்பதென்பது எப்போதுமே இழுக்கு என்பதை உணருக! சுயாட்சி என்பது ஒவ்வொருவருடையதுமான பிறப்புரிமையாகும். திராவிடர்களுக்கும் சுயாட்சி கேட்க உரிமையுண்டு. அதை யாரும் மறுக்க முடியாது. திராவிடர் யாரும் அதைக் கேட்கவும் வெட்கப்பட வேண்டிய தில்லை. என்னுடைய ஆயுட்காலம்

பரம ஏழைதான் என்கிறபோதிலும் ஒருபோதும் என்னுடைய உரிமை உணர்ச்சியை யாருக்காகவும் விட்டுக் கொடுத்தேனில்லை. என் உணர்ச்சியை யாருக்கும் எதற்காகவும் அடிமைப்படுத்தினேன் இல்லை. திராவிடன் ஒவ்வொருவனுக்கும் இவ்வுணர்ச்சியிருத்தல் அவசியம். ஹிந்தியும் தமிழ் மொழியும் தம் இயல்பில் பெரிதும் மாறுபட்டவை. ஒன்று சேர்ந்து வாழ முடியாதவை. எனவே ஹிந்தியைப் புகுத்தித் தமிழைக் கொலை செய்ய நினையாதே!

*   *

இன்னும் ஒரு வாரம் தவணை இருக்கிறது. அதற்குள் உத்திரவை மாற்றலாம். எனவே மாற்றிவிடு. மானத்தோடு வாழ மனம் இருந்தால்.

### வடவரின் எச்சரிக்கை பயன்படுமா?

வட நாட்டவர் எச்சரிக்கையாகவே இருப்பார்கள். இருந்தாலும் மக்களின் உரிமை வேட்கை முன் அவர்கள்தான் என்ன செய்ய முடியும். ஒரு பட்டேல்தான் என்ன சாதித்து விடுவார்?

*   *

வர வர ஒவ்வொரு மாகாணமும் சுய ஆட்சி கோரத்தான் செய்யும். மத்திய சர்க்கார் புத்திசாலித்தனமாக மாகாணங்களோடு நட்பு முறையில் சம்பந்தம் வைத்துக்கொள்ள முற்பட்டால்தான் ஒன்றுபட்டு இருக்க முடியுமே ஒழிய, பட்டாளத்தை வைத்துக் கொண்டு பலாத்காரத்தால் மாகாணங்களை தம்முடன் பிணைத்து வைத்துக்கொண்டிருக்க முயற்சிப்பதும் முடியாதகாரியமாகவே ஆகிவிடும். மத்திய சர்க்கார் அவ்வளவு புத்திசாலிகளாக நடந்து கொள்வார்கள் என்று தோன்றவில்லை.

### பெண்களைநோக்கித்தமிழ்ப் பெரியார்!

இதுவரை நான் இவ்வளவு பெரிய பெண்கள் கூட்டத்தைப் பார்த்தறியேன்!

எனவே உங்களைக் காணும்போது நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். வளம்பொருந்திய உங்கள் தாய்நாடு உரிமையோடு இயங்க வேண்டுமானால் நீங்கள் ஆளுந்திறனுடைய மக்களை, போரிட்டு வெற்றி காணுந்திறனுடைய மக்களை ஈன்றிடல் வேண்டும். பிஸ்மார்க்கின் கொள்கையைப் பின்பற்றி நீங்கள் அல்லும் பகலும் கனவிலும் நினைவிலும் இதே நினைப்புடன் இருக்கவேண்டும். அந்நினைப்பே வீர இளைஞர்களைப் பெற்றெடுக்க உங்களுக்கு உதவியாயிருக்கும். குழந்தைகளை பயங்காட்டி வளர்க்காதீர்கள். சன்மார்க்க சங்கத்தில் நான் ஈடுபட்டிருந்த காலத்தில் என்னால் பாடப்பட்ட பாட்டைக்கூட இப்போது திருத்திக்கொள்ளவேண்டுமென்றும் நான் ஆசைப்படுகிறேன். பெண்களெல்லாம் சன்மார்க்க பிள்ளைகளைப்பெற்றெடுக்க வேண்டும் நிறைந்த பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்கிற கருத்தில் அதை மாற்றியமைக்க இப்போது எண்ணுகிறேன்.

*   *

திராவிட நாட்டை மாற்றியமைக்கும் சக்தி திராவிட பெண்களிடத்துதான் இருக்கிறது, அவர்கள் மனது வைத்தால் இந்நாட்டில் ஒரு காந்தியல்ல 1000-காந்திகளை, ஒரு பெரியாரை அல்ல லட்சக்கணக்கான பெரியார்களை உண்டாக்க முடியும்,

*   *

நாங்கள் கலந்துகொண்டிருந்த காங்கரஸ் 1947 ஆகஸ்ட் 15-லேயே செத்துவிட்டது. அதற்கு செய்யவேண்டிய கிரிகைகள் எல்லாம்கூட செய்யப்பட்டாகிவிட்டது.

### காங்கரஸ் திராவிடத் தோழர்களே! கருத்திற்கு வேலை கொடுப்பீர்!

திராவிடம் உயரவேண்டுமானால், உங்கள் வாழ்க்கை வளம்பட வேண்டுமானால் நீங்கள் திராவிடக்கழகத்தைத்தான் பின்பற்றி நடக்கவேண்டுமே ஒழிய வடக்குத் திக்கை எதிர்பார்த்தால் கைலாயத்திற்குத்தான் வழி காட்டப்படும். எனவே காங்கரஸ் திராவிடத்தோழர்களும் திராவிடக்கழகத்தின் கோட்பாடுகளை நட்பால் அலசிப் பார்த்து, தம் பகுத்தறிவால் சிந்தித்துப் பார்த்து, உண்மையுணர்ந்து திருத்தம் அடைவார்களாக.

*   *

கெட்டதிலிருந்து நல்லது பிறப்பது போல் அவினாசியாரின் ஹிந்தி நுழைப்பு ஆரியம் இந்நாட்டைவிட்டு அகலக் காரணமாய் இருக்கட்டும்.






## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet ERODE.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை